Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

தினசரி ஸ்தோத்ரங்கள்

பாடல்கள்

© GTAPL

R.S.சுப்புலஷ்மி அம்மாள்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy.

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

தினசரி ஸ்தோத்திரங்கள்

பாடல்கள்

கிரி

கிரி டிரேடிங் ஏஜென்ஸி பிரைவேட் லிமிடெட்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

Book Name	:	**DINASARI STOTRANGAL**
Language	:	Tamil
Copyright	:	GIRI TRADING AGENCY PRIVATE LIMITED
2nd Edition	:	April 2008
7th Reprint	:	August 2009
Pages	:	80
Price	:	Rs.30.00
ISBN No.	:	978-81-7950-113-9
Book Size	:	Crown
Paper	:	Creamwove
Copies	:	1000
Published by	:	GIRI TRADING AGENCY PRIVATE LIMITED
Regd. Office	:	Modi Niwas, Opp.Post Office, Matunga, Mumbai - 19. ✆ (022) 2414 1344
Admn. Office	:	134 (58/2), T.S.V. Koil Street, Mylapore, Chennai - 4. ✆ (044) 2464 3551

All rights reserved. This book, or parts thereof, may not be reproduced in any form or by any means, electronic or mechanical, including photocopying, recording or any information storage and retrieval system now known or to be invented, without written permission from the Publisher.

Our Branches:

MUMBAI

MATUNGA : Basement Pal Residency, Below HDFC Bank, Bhandarkar Road, Matunga, Mumbai - 400 019. ✆ (022) 2414 3140, 2412 2316, 2417 5401, 02, 03

DOMBIVILI (E) : Seva Dham "A" Wing, Shripal Nagar, Rajaji Path, 4th Cross, Opp.: Ponnu Guruvayurappan Mandir, (Madrasi Mandir), Dombivili (E), Thane Dist. 421 201. ✆ (0251) 244 9585

GOREGAON (W) : 2, Siddhi Vinayak Apts, Sita Ram Mandir Road, Bangur Nagar, Mumbai-400 104. ✆ (022) 2876 7298

NERUL : S.I.E.S. Engineering & Computer College Complex, Anjaneyar Temple, Navi Mumbai - 400 706. ✆ (022) 6514 9841

CHENNAI

MYLAPORE : 14 (Old 10), Kapaleeswarar Sannadhi Street-600 004. ✆ (044) 2464 0376

NANGANALLUR : 14 (Old 8), 10th Street, Near Raghavendra Temple-600 061. ✆ (044) 2267 1335

KANCHIPURAM : 5&146-B, Kamakshi Amman Sannadhi Street-631 502. ✆ (044) 2722 4415

OTHER CITIES

COIMBATORE : F6, T.M.House, 92, Thiruvenkatasamy Road, R.S.Puram-641 002. ✆ (0422) 254 1523

MADURAI : 15, North Tower Street, (Opp. Mottai Gopuram)-625 001. ✆ (0452) 262 8090

SECUNDERABAD : Sri Subramanya Swami Devalayam, Padmarao Nagar, Skandagiri-500 061. ✆ (040) 2750 3046

BANGALORE : 23/3, 5th Cross, Sampige Road, Malleswaram-560 003 ✆ (080) 2356 3001

E-mail : sales@giri.in *Website : www.giri.in*

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஆசிரியரைப் பற்றி

சகோதரி– சுப்புலட்சுமி அம்மாள்

பரித்ராணாய ஸாதூனாம் வினாசாய ச துஷ்க்ருதாம்
தர்ம ஸம்ஸ்த்தாபனார்த்தாய ஸம்பவாமி யுயே யுகே

என்று கீதையில் கண்ணன் உரைத்தது போல் இப்பூவுலகில் அதர்மத்தையும் துஷ்க்ருத்யத்தையும் அகற்றி தர்மத்தை ஸ்தாபிதம் செய்யப் பல ஆசார்யர்கள் அவதரித்தார்கள். ஆதி சங்கரர் முதல் இன்று கண்கண்ட தெய்வமென விளங்கும் காஞ்சி ஸ்ரீ பரமாசார்யாள் வரை இதை நாம் கண்கூடாகப் பார்த்தும், அனுபவித்தும், வருகின்றோம்.

இந்த வகையில் ஆர். எஸ். சுப்புலட்சுமி அம்மாள் லோக க்ஷேமத்திற்காக, முக்கியமாக மாதர் குலத்தின் மேன்மைக்காக தமது வாழ்நாள் முழுவதும், பெண்குலத்தின் பெருமையை ஓங்கச் செய்வதற்காகவே தம்மை அர்ப்பணித்திருக்கிறார். பெண் குலத்தின் மேன்மையே தமது தர்மமெனக் கருதி அம்முயற்சியில் தமக்கு நேர்ந்த பல இன்னல்களையும் இடையூறுகளையும் தமது மனோபலத்தினால் எதிர்த்து அணுவளவும் தமது லட்சியத்தில் அசையாது போராடி,

"ஸ்வதர்மமபி சாவேக்ஷ்ய ந விகம்பிது மர்ஹலி"

என்று கீதையில் கண்ணன் கூற்றுக்கு இலக்கணம் கற்பித்தார்.

எவ்விதக் கல்வி அறிவும் இல்லாமல் பெண்கள் வீட்டில் அடைந்து கிடைக்கும் காலத்திலேயே தாம் ஸ்வயம் ஒரு பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டு, பெண்களுக்கு கல்வி. உத்தியோகம், தன்னம்பிக்கையுடன் கூடிய நல்வாழ்விற்கும் வழி வகுத்துக் கொடுத்தார். அம்மையார் பெண்களுக்காகப் பல பள்ளிகளையும் நிறுவச் செய்து சாதனை படைத்தார். அவர்கள் வகுத்த வழியில் தான் இன்றும் பல்லாயிரக்கணக்கான மாதர்கள் தங்கள் வாழ்க்கையை அமைத்துக்கொண்டு வாழ்வாங்கு வாழ்கின்றனர்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஆத்ம ஞானத்துக்கும், பக்திக்கும், படித்தவர்கள், பாமரர்கள் எல்லோருக்கும் ஜன்மா கடைத்தேறி மோக்ஷ நிலையலையடை, மார்க்கம் காட்டி, அந்த ஞானத்தை தானே புகட்டி முன்னேற்றத்துக்கு ஆசிரியர் போல் பல நூல்களையும் இயற்றிப் பிரசுரித்திருக்கும் பெருமை சுப்புலட்சுமி ஒருவரையே சாரும்.

இத்துடன் மாதர்களின் ஆன்மீக வளர்ச்சிக்காகவும் பல தெய்வீக கிரந்தங்களையும் எளிய தமிழில் அம்மையார் இயற்றியிருக்கிறார்கள் இவ்வகையில் நாம் எல்லோரும் அம்மையாருக்கு நமது வாழ்நாள்முழுதும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

சுப்புலட்சுமி அம்மாளின் வாழ்வும் வாக்கும் மனித சமுதாயத்திற்கே ஒரு வழிகாட்டியாக அமைந்துள்ளது என்பதில் சற்றும் சந்தேகமில்லை. அவருடைய திருநாமம் இப்பூவுலகில் வாழ்வு உள்ள வரையில் நிலைத்து நிற்க எல்லாம் வல்ல எம்பெருமாட்டி ஆதி பராசக்தியின் பாதத் தாமரைகளைப் பணிவோமாக.

இந்த வகையில் வேதாந்தப் பாட்டுகளும் தினசரி ஸ்தோத்திரங்களும் இப்பதிப்பில் கிரி டிரேடிங் ஏஜென்சியாரால் அச்சிட்டு வெளியிடப்படுவது பாராட்டுக்குரிய விஷயம். இந்நூலை எல்லோரும் படித்து இகபர சுகங்களை அடைவார்களென்பது திண்ணம்.

ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி:

கௌரி சின்னசுவாமி–பிரெசிடண்ட்,

ஸ்ரீ சாரதா லேடிஸ் யூனியன்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

முன்னுரை

ஸமஸ்க்ருத ஞானமும் அதிகக் கல்வி அறிவும் இல்லாத நம் தமிழ் நாட்டுப் பெண் மக்கள் வேத வேதாந்தங்களின் சாராம்சத்தை எளிய விதத்தில் தெரிந்து கொள்ளும்படிப் பெரியவர்களால் பாடப்பட்ட சில வேதாந்தப் பாடல்களும், சம்சாரத்தில் இருந்து கொண்டு, கணவன், பெரியவர்கள்,குழந்தைகள் இவர்களுக்குப் பணிவிடை செய்து கொண்டிருக்கும் பெண்கள் தினசரிக் கடமைகளைப் பற்றின்றி கடவுளுக்கு அர்ப்பணமாகச் செய்வதற்கு அனுகூலமாய் அறிவுறுத்தும் தினசரி ஸ்தோத்திரப் பாடல்களும் இந்த புத்தகத்தில் சேர்ந்திருக்கின்றன.

காலையில் படுக்கையைவிட்டு எழும்போது பகவானுடைய அருமையான பல பெயர்களைச் சொல்லியும் அவரது அம்சமே மிகுந்த அவரது பக்தர்கள் முக்தர்களையும் நினைத்துத் துதிக்கும் இதிலுள்ள முதற்பாடலை உதய ராகத்தில் பாடுவார்கள். நமது பெரியவர்கள் சுறுசுறுப்பும் மனத் தெளிவுமுள்ள அதிகாலையில் கடவுளைத் தியானம் செய்வதும், மஹா ரிஷிகளையும், பெரியோர்களையும் நினைத்து ஸ்தோத்ரம் செய்வதும், அந்த நாள் முழுவதும் நமக்கு சந்தோஷத்தையும், மனச்சாந்தியையும் ஊக்கத்தையும் உண்டாக்கும்.

பிறகு நதி ஸ்தோத்திரங்களைச் சொல்லி ஆற்றிலோ, அல்லது; குளத்திலோ ஸ்நானஞ் செய்து, அங்குள்ள த்ரிமூர்த்தி ஸ்வரூபமான அச்வத்த விருக்ஷத்தை அதன் ஸ்தோத்திரத்தைச் சொல்லிக் கொண்டு பலதரம் வலம் வருவார்கள். பிறகு சூரிய நாராயண ஸ்தோத்திரத்தைச் சொல்லிக் கொண்டே வீடு சேர்ந்து மடியுடுத்தி நெற்றிக்குக் குங்குமம், திருநீறு இட்டுத் துளஸியம்மன் ஸ்தோத்திரத்தைச் சொல்லி துதித்துப் பூஜிப்பார்கள். அதன்பின், மானசீக பூஜை முதலியவற்றால் பகவானைத் தியானம் செய்து வீட்டிலுள்ள பெரியோர்கள், குழந்தைகள் முதலியவர்களுக்குப் பணிவிடை புரிந்து போஜனமளித்துத் தானும் பூசித்துத் தாம்பூலம் முதலியவற்றால் கணவனை உபசரித்து சிரம பரிஹாரம் செய்து கொள்வர். பிற்பகலில் இதிஹாஸ புராணங்கள்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

சம்பந்தமாகிய இராமாயணம், குசல வாக்கியம். ஆனந்தங்காடு பார்வதியம்மன் சோபனம் முதலான பாடங்கள், மனப் பாடமாயிருக்கும் பாடல்களைச் சொல்லியோ, சொல்லிச் சொல்லிக் கேட்டோ ஆனந்தம் அடைவார்கள்.

அஸ்தமன வேளையில் திருவிளக்கேற்றி வைத்து அதன் ஸ்தோத்திரத்தைச் சொல்லி துதித்து சேவித்தெழுந்து பக்தி பண்ணுவார்கள். இப்படியாக சம்சாரத்திலிருந்து வேலைகளைச் செய்துகொண்டே இல்லத்தை மங்களகரமாய் வைத்துக் கொண்டு மனது விச்ராந்தியடையும் படியாய் உத்தமிகளான நமது பெண்களுக்குக் கருணாநிதியான பகவான் அருள் புரிவாராக. மராமரா வென்று வேடனுக்கும், வாசி வாசியென்று பக்தனுக்கும் முக்தி கொடுத்த தெய்வம் இப்படித் த்ரிகரண சுத்தியோடு மனப்பூர்வமாய் தினம் தினம் பல வழிகளாலும் கடவுளைத் தொழுது பக்தி பண்ணும் பேதமையான பெண்மணிகளுக்குக் "கடவுளை நம்பினோர் கைவிடப்படார்" என்றபடி நற்கதியளிப்பதில் சந்தேகமில்லை.

இக்காலத்து நவீன நாகரீகத்தில் மறைந்து போய்க் கொண்டிருக்கும் அநேக நற்கருமங்களைப் போல் அல்லாமல் என் சகோதரிகள் அநேகமாய்ப் படிக்கத் தெரிந்தவர்களாகையால் இந்த பாடல்களை மனப்பாடம் செய்து சத்கர்மங்களைப் புரிந்து பரதேவியின் அருளுக்குப் பாத்திரர்களாவார்களாக !

ஓம் ஸ்ரீரஸ்து!

ஸமஸ்த ஸன்மங்களானிஸந்து!

சகோதரி—ஆர்.எஸ். சுப்புலட்சுமி அம்மாள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பதிப்புரை

வேதம் மறைபொருளாகச் சுருக்கிச் சொல்வதை–தத்துவ முறையைச் சற்று விளக்கிக் கூறுவது வேதாந்தம். வாழ்க்கை நல்ல நெறிப்பட, இறுதியில் வீடுபேறு அடைய உதவுகிறது வேதாந்தம். அந்த அளவுள்ள வேதாந்தமும்கூட எவராலும் எளிதில் எல்லோரும் புரிந்து, தெளிந்து, செயல்படுத்தி வாழ்க்கையில் கடைப்பிடித்து நலம் பல பெற்றுத் திகழ வேண்டும் என்பதற்காகத் தான் இந்நூலில் எளிய முறையில் தமிழில் பல நல்ல வேதாந்தக் கருத்துக்களை உள்ளடக்கி– எல்லோருக்கும் கண்ணாடிபோல் காட்டி– பல விஷயங்களையும், கருத்துக்களையும் அறிந்திடும்படிச்செய்ய உதவுகிறார் சகோதரி. ஆர்.எஸ். சுப்புலட்சுமி அம்மாள் அவர்களுக்கு நாம் என்றென்றும் கடமைப்பட்டிருக்கிறோம். தேனினுமினிய தமிழில் உள்ள வேதாந்தப் பாட்டுகளும் தினசரி நாம் வாழ்க்கையில் பயன்பெறச் சொல்ல வேண்டிய ஸ்தோத்திரங்களும் நம் வாழ்க்கைக்கு மிகவும் இன்றிய மையாதவை. அதுவும் நாம் பேசுகின்ற மொழியிலேயே நமக்கு உற்றத் துணையாக அமைந்திருக்கிறது எனலாம். இந்தச் சிறு நூலைப் படிப்பதன் மூலம் நமக்குப் பல அரிய வேதாந்தக் கருத்துகள் தெரிய வருவ தோடு பல்வேறு கதைகளையும் கூடத் தெரிந்து கொள்ளவும் முடிகிறது.

நதிகளில் ஸ்நானம் செய்வதால், நதி ஸ்தோத்ரம் படிப்பதால் உண்டாகும் பலன், அரச மரத்தின் தனிச் சிறப்பு. அதன் பூஜையால் வரும் சிறப்பு, வ்ருக்ஷ ராஜாவான அதைப் பூஜித்தால் வாழ்வுண்டு என்பது புலனாகிறது.

துளசி ஜகந்மாதாவை வணங்கி வழிபடுவோருக்குத் தீவினையகலும், பிணிகள் நீங்கும், அஷ்ட ஐச்வரியமும் பெருகும் என்பதையும் இன்னும் இவைபோல் பல வாழ்க்கைக்கு விளக்கமாக வரும் சூரிய நாராயணர் பற்றிய ஸ்துதிகள், திருவிளக்கு பூஜை, திருவிளக்கு நாச்சியார் ஸ்தோத்திரம் முதலியனவும் நமது அக வாழ்விற்கும், புறவாழ்விற்கும் அணிகலன்களாக இருப்பவை. இவைகளை அனைவரும் கற்று, நடைமுறைப்படுத்தி, வாழ்க்கையைச் செழிக்கச்செய்து, சகலசௌபாக்கியங்களும் பெற்று வாழ வேண்டி பராசக்தி ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரியை பிராத்திப்போமாக.

–பதிப்பகத்தார்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

உள்ளுரை

1. பக்தாள் முக்தாள் மூவர் தேவர்களின் ஸ்தோத்திரம் 9
2. தர்மராஜாவுக்கு நாரதருஷி உபதேசித்த நதி ஸ்தோத்திரம் 12
3. அசவத்த வ்ருக்ஷ ஸ்தோத்திரம் 14
4. ஸ்ரீ துளசியம்மன் ஸ்தோத்திர வாக்யம் 15
5 ஸூர்ய பகவான் ஸ்தோத்திரம் 17
6. பரமாத்மா திருப்பள்ளி எழுச்சி 21
7. வேதாந்த உதயராகப் பாட்டுகள் 26
8. ஹரிஹரீ ஸ்தோத்திரம் 32
9. மானஸீகக் காசி யாத்திரை 44
10. மானஸீக ஸேது ஸ்நானம் 47
11. ஸ்ரீ ராமர் இராமேஸ்வரத்தில் சிவலிங்கம் பிரதிஷ்டை செய்தல் 50
12. ஸ்ரீ கிருஷ்ண பகவான் பாண்டவர்களுக்கு உபதேசித்த மானஸீக பூஜை 57
13. ஸ்ரீ ரங்கநாத மானஸீக ஸ்தோத்திரம் 67
14. வேதாந்த – நொண்டிச் சிந்து 69
15. திருவிளக்கு பிரார்த்தனை 75
16. திருவிளக்கு தேவி ஸ்தோத்திரம் 75
17. பரதேவதை ஸ்தோத்திரம் 76

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பரதேவி துணை

வேதாந்தப் பாட்டுகளும் தினசரி ஸ்தோத்திரங்களும்

பக்தாள் முக்தாள் மூவர் தேவர்களின் ஸ்தோத்திரம்

உதய ராகம் மெட்டு

1. ஆதி கணபதி ஆறுமுகனை
அம்பிகை மணவாளரைக்
காலபைரவர் நந்திகேச்வரர் வீரபத்திர தக்ஷிணா
மூர்த்தியைத் தியானித்தெழுந்தேன்.

2. சேஷகிரிவளர் வெங்கடேசரைத்
திருமகள்அலமேலுவை
தேவி ஸரஸ்வதி சதுர்முகப்
பிரும்மா பூமிதேவி அம்மனை

3. பிராணதாரகமாக விளங்கிடும்
பரிபூர்ணகாவேரி அம்மனை
ஆதி கங்கையை அறுபத்தாறு
கோடி அகில புவனத்தின் தீர்த்தத்தை

4. மத்ஸ்ய கூர்ம வராக நரசிங்க
வாமனாவதரா மூர்த்தியை
வீரபரசுராம பலபத்திர
ஸ்ரீராமசந்திரனை பௌத்தரை

5. ஹரி திருமார்பில் விளங்கிடும்
ஸ்ரீதுளஸிமஹா தேவியை
ஜனகன் திருமகள் பிராணநாதரை
ஸ்ரீ பரதலட்சுமண சத்துருக்கினரை

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

6. ஆதிசக்தியை லட்சுமி ஸரஸ்வதி
சாவித்திரி காயத்திரி அம்மனை
அகலி துரோபதை சீதை தாரையை
மண்டோதரி ஐந்து பேர்களை

7. தேவகிகுந்தி சுபத்திரை ருக்மணி
சப்தரிஷிகளின்தேவியை
தசரதர் தேவி கௌசல்யையுடன்
சிறந்த உத்தமி மார்களை

8. அயிராணியுன் ஸுரகன்னிகளை
ஐராவதம் உச்சை சிரவம்
அருமையாகிய காமதேனுவை
அடர்ந்த கற்பகச் சோலையை

9. அஷ்டதிக்குப்பாலர் அவர்கள்
தேவியை அஷ்ட வசு அஷ்ட கஜங்களை

10. வசிஷ்டர் வாமதேவர் காச்யபர் அகஸ்தியர் அத்ரி ஆங்கீரஸை
புலஸ்தியர் கிரது புலகர் முதலான் தவசிலாக்ய மகான்களை

11. வேத வியாஸரை மார்க்கண்டேயரை
வீணாகான நாரதரை
ஸுதர்சவுநகர் துர்வாஸமுனி
ஜடபரதர் ஜரத் காருவை

12. மதங்கமாமுனி ருச்யசிருங்கரை மகருஷிசரபங்கரை
பிருகுமாமுனி கௌதமரிஷி பேர் பெற்ற விச்வாமித்ரரை

13. ஸனகாதிகளை ஜனகராஜரைச் சுகருடன் சதானந்தரை
வைசம்பாயனர் சுமந்து ஜைமினி பைலவர் ஜாபாலியை

14. கபிலரிஷியுடன் தத்தாத்திரேயரைச் சுகருடன் சதானந்தரை
ஹயக்கிரீவரைப் பிரஹஸ்பதி குரு ஆதிசங்கராசாரியரை

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

15. பத்மபாதரை அஷ்டகோணரைப் புகழ்பெற்ற ராமானுஜரை
ஸ்ரீதராசாரி ஸ்ரீ கோவிந்தரைச் சிறந்த மத்வா சாரியரை

16. அகிலபுவனத்தைக் காத்து ரட்சிக்கும்
அஷ்ட லட்சுமிநாரதரை
அனுமார் பெரிய திருவடியுடன்
ஆழ்வார்கள் பன்னிருவரை

17. பரமபக்தனாம் ருக்மாங்கதன் துருவன்
பக்தனாம் பிரகலாதனை
பக்தி செய்திட்ட குசேலர்
அம்பரிஷன் பீஷ்மர் விதுரர் பாஞ்சாலியை

18. ஆதிமூலத்தைக் கூவியழைத்திட்ட
அறிவுமிகுந்த கஜேந்திரனை
ஹரனைத் துதிசெய்த பாணராவண
பிருங்கி சண்டி தேசபக்தரை

19. அப்பர் சுந்தரர் ஞானசம்பந்தர்
அறுபத்துமூவர் தங்களை
ஜயதேவருடன் துளசி தாசரை
ஹரிசிறந்த பக்திமான்களை

20. பக்தர் குழாங்களைப் பகவான்
மூவரை பாரிலுள்ள பக்தர்களை
ஏற்றுத் தொழுதிட்டேன் இருதய
சுத்தியுடன் போற்றினேன் புகழ்பாடினேன்

21. உதய காலத்தில் உள்ளம்
தெளிந்துதான் இருதயத்தில் பரதேவியின்
பாத கமலத்தைத் தியானம் பண்ணியே பவக்கடல்
கடந்தேறினேன் தியானித்தெழுந்தேன்.

ஓம் தத் ஸத் பிரம்மார்ப்பணம் அஸ்து.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

தர்மராஜவுக்கு நாரதருஷி உபதேசித்த நதி ஸ்தோத்திரம்

1. நதிஸ்தோத்ரம் ப்ரவக்ஷ்யாமி ஸர்வபாப ப்ரணாசினீம் ।
பாகீரதீவாரணாஸீ யமுனா ஸ்ரீஸரஸ்வதீ ॥

2. பல்குனீசோணபத்ராச நர்மதா கண்டகீ ததா ।
கயாப்ரயாக ஸரபூ த்ரிவேணீ மணிகர்னிகா ॥

3. கிருஷ்ணவேணீ பீமநதீ கௌதமீ பாபநாசினீ ।
அவினாசீ அயோத்யா கங்கா துங்கபத்ராமலாடஹா ॥

4. காவேரீ ஸிந்து கபிலா தாம்ரபர்னீ ஹரித்முகா ।
குமுதவதீ ஹேமவதீ க்ருதமாலா ஹரத்முகா ॥

5. மஞ்ஜரீ தப்தீ சைவஸீதா அளகாநந்தினீ ।
ஸித்தாத்ரீ சிரிஸிம்மாத்ரீ புண்டரீகஸமுத்பவாம் ॥

6. சுவாமி புஷ்கரணீ சைவ நித்ய புஷ்கரணீ ததா ।
சந்த்ரபுஷ்கரணீ சைவ ஹேம புஷ்கரணீ ததா ॥

7. காலேச்வரீம் வேகவதீம் கோமுகம் கோமதீநதீம் ।
கௌ கோதகீம் குருக்ஷேத்ரம் பத்ரீத்வாரகீததா ॥

8. சாளக்கி ராமஞ் ச கேதாராம் நரநாராயணாசரமம் ।
ப்ருந்தாவனம் சமதுரா ஹரித்வாரஞ்ச கோகுலம் ॥

9. கனகாசலஞ்ச கைலாஸம் ஹிமயம் சக்ரவாளகம் ।
க்ரௌஞ்சபாதம் வேதபாதம் நந்திபாதஞ்ச கோகுலம் ॥

10. அஹோபிலம் ஜகன்னாதம் வேங்கிடாகிரி ஸந்நிதிம் ।
அயோத்யா ஸேதுமதுரா ஸ்ரீமுஷ்ணம் ரங்கமந்திரம் ॥

11. ஸ்ரீ காகுளஞ் ச ஸ்ரீ கூர்மம் பாண்டுரங்கம் கபிஸ்த்தலம் ।
புஷ்பாகாரம் ததா காஞ்சி அனந்தஞ்ச ஜனார்த்தனம் ॥

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

12. பஞ்சக்ஷேத்திரம் ஹஸ்திகிரீம் ஸ்வேதாத்ரி விருஷபாசலம்।
அவந்தீ நகரீம் மாயா ஸ்ரீசைலம் கும்பகோணகம் ॥

13. க்ஷீராப்திக்ருஷ்ண தீர்த்தஞ் ச தக்ஷிணத்தவாரதீ ததா।
ஸுப்ரமன்யம் விருபாக்ஷம் ருத்ரபாதஞ்ச நூபுரம் ॥

14. பம்பாதீரம் ஸ்துதிபதிம் காளஹஸ்தீம் மஹாநதீம்।
கன்யாகுமாரீம் வேதபுரீம் காச்மீரம் சித்ரகூடகம் ॥

15. சங்கரநாராயணஞ் ச வைகுண்டம் பாபநாசனம்।
வேதாரண்யம் பஞ்சசநதம் கௌரீ மாயூரதர்சகம் ॥

16. சாயாவனஞ்ச ஸ்ரீவாஞ்ச்யம் ஸ்ரீனிவாசம் நிவாஸிதம்।
ஆதிநாத ஜகத்விந்தம் காலமேகம் ச குந்தலம் ॥

17. ஹாலாஸ்யநகரீம் த்ருஷ்ட்வா அதிபாப விமோசனம்।
பிரஹ்மோபேந்த்ர கிரிஞ்சைவ கோமதீம்
வைஷ்ணவீம் ததா ॥

18. நாரதீயமிதம் ஸ்தோத்ரம் நதிஸ்தோத்ராணி ஜீவக:।
பிராத: காலே படேந்நித்யம் ஸ்நானகாலே விசேஷத: ॥

19. கோடி ஜன்மக்ருதம் பாபம் விஷ்ணுஸாயுஜ்யமாப்னு யாத்।
பூர்வே கங்கா படேத் நித்யம் தக்ஷிணேயமுனா ததா ॥

20. பச்சிமே நர்மதா நித்யம் உத்தரே ஸரயூ ததா।
ஆக்னேய்யாம் தாம்ரபர்ணீ ச நிருருத்யாந்து ஸரஸ்வதீ ॥

21. வாயவ்யாம் துங்கபத்ரா ச ஈசான்யாம்கண்டகீ ததா।
மத்யே காவேரிகா ப்ரோக்தா ஸ்நானமித்யாதி ஆசரேத் ॥

இதி ஸ்ரீ நதிஸ்தோத்ரம் ஸம்பூர்ணம்.
ஓம் தத் ஸத்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அச்வத்த வ்ருக்ஷ ஸ்தோத்திரம்

1. மூலதோ பிரம்மரூபாய மத்யதோ விஷ்ணு ரூபிணே
அக்ரதச் சிவரூபாய வ்ருக்ஷராஜாய தே நம :

2. முந்திமுதலில் முனைத்தாய் நமோ: நம
மூவுலகமுஞ் செழித்துத் தழைத்தாய் நமோ: நம
பக்தியுள்ளோர்க் கருளும் பகவன் நமோ: நம
இச்சையுடன் வரமளிக்கும் எந்தாய் நமோ: நம

3. வாழ்மரத்துமன்னா வளமையுடையவரே
காயத்திரிதன் பொருளே கண்மூன்றுடையவரே
சோலையழகரே சொல்லுக் கெட்டாதவரே
அல்லலுற்ற பக்தருக்கு அபயம் கொடுப்பவரே !

4. அருந்தபஸிபக்தருக்கு அபயம் கொடுப்பவரே
ஆரூர் அரங்கம் அழகு திருக்காவேரி
சோலைவளமையுள்ள திருக்குடந்தை மாநகரும்
நதிக் கரைகள் தோறும் நிறைந்து நின்ற நாயகரே !

5. (உம்ம) வேரில்விளங்கும் விஷ்ணுவை நான் பணிந்தேன்
அடிமரத்திலே விளங்கும் அச்சுதரைப் போற்றி செய்தேன்.
கொம்பில் விளங்குகின்ற கோவிந்தரைப் பணிந்தேன்.
பக்கத்தில் ஜோதிவிடும் பானுவைப் போற்றுகின்றேன்.

6. சுற்றும் பிரகாசிக்கும் சூரியனைக் கைதொழுதேன்
நடுவில் விளங்குகின்ற நாரணரை நான் பணிந்தேன்
இலையில் செழித் திருக்கும் ஹிருஷீகேசரைத் தொழுதேன்
பூவிலே தோன்றும் புருஷோத்தமரைப் பணிந்தேன்

7. பிஞ்சிலே காணும் பெருமானைக் கை தொழுதேன்
காயிலே தோணும் கமலநாரையும் கைதொழுதேன்
பழத்திலே விளங்கும் பத்மநாபர் பாதம் பணிந்தேன்
விதையில் விளங்கும் விச்வமூர்த்தியடி வணங்கினேன்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

8. ஆவாஹனங்கள் பண்ணி, அர்ச்சித்தேன் வாழ்வரசை
சுற்றிப்பிரம தக்ஷிணமாய்த் திருவரசைப் போற்றி செய்தேன்
பக்குவமாய்ப் பழங்கள் வைத்துப் பக்தியுடன் பூஜை
செய்தேன் புஷ்பங்களைச் சொரிந்து போற்றி நமஸ்கரித்தேன்.

9. மஞ்சளுடன் குங்குமமும் மணக்கும் நல்ல சந்தனமும்
தாம்பூலசொர்ண புஷ்பம் திருவடியிலே சொறிந்திட்டேன்.
வளமையுள்ள வாழ்வரசின் மலரடியில் நான் பணிந்தேன்.
அடுத்தாற்கரசே! அடைந்தோர்க்குக் கற்பகமே !

10. புவனம் பிழைக்கவந்த புண்ணிய வாழ்மரமே
வேம்புக்கு நாயகரே விருக்ஷத்தின் ராஜாவே
திருமூர்த்தியாய் விளங்கும் செழிப்புடைய பேரரசே
பரதேவிதன் அருளால் பாக்யத்தைத் தாருமையா !

ஓம் தத் ஸத் பிரம்மார்ப்பணம்

ஸ்ரீ துளசியம்மன் ஸ்தோத்திர வாக்யம்

1. ஸ்ரீமத் துளஸியம்மா! திருவே கல்யாணிம்மா !
வெள்ளிக் கிழமை தன்னில் விளங்குகின்ற மாதாவே
செவ்வாய்க் கிழமை செழிக்க வந்த செந்திருவே
தாயாரே உந்தன் தாளிணையில் நான் பணிந்தேன்.

2. பச்சைப் பசுமையுள்ள துளஸீ நமஸ்தே
பரிமளிக்கும் மூலக் கொழுந்தே நமஸ்தே
அற்பப் பிறப்பைத் தவிர்ப்பாய் நமஸ்தே
அஷ்ட ஐஸ்வர்யம் அளிப்பாய் நமஸ்தே.

3. ஹரியுடைய தேவி அழகீ நமஸ்தே
அடைந்தார்க்கு இன்பம் அளிப்பாய் நமஸ்தே
வனமாலை யென்னும் மருவே நமஸ் தே
வைகுண்ட வாஸியுடன் மகிழ்வாய் நமஸ் தே.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

4. அன்புடனே நல்ல அருந்துளஸி கொண்டுவந்து
மண்ணின் மேல்நட்டு மகிழ்ந்து நல்ல நீருற்றி
முற்றத்தில் தான் வளர்த்து முத்துப்போல் கோலமிட்டு
செங்காவி சுற்றுமிட்டுத் திருவிளக்க மேற்றிவிட்டுப்

5. பழங்களுடன் தேங்காயும் தாம்பூலம் தட்டில்வைத்துப்
புஷ்பங்களைச் சொரிந்து பூஜித்த பேர்களுக்கு
என்னபலனென்று ஹ்ருஷீகேசர் நான் கேட்க-
மங்களமான துளசி மகிழ்ந்துரைப்பாள்.

6. மங்களமாய் என்னை வைத்து மகிழ்ந்து உபாஸித்தவர்கள்
தீவினையைப் போக்கிச் சிறந்த பலன் நானளிப்பேன்
அரும் பிணியை நீக்கி அஷ்ட ஐஸ்வரியம் நானளிப்பேன்
தரித்திரத்தை நீக்கிச் செல்வத்தை நான் கொடுப்பேன்.

7. புத்திரனில்லாதவர்க்குப் புத்திரபாக்யமளிப்பேன்
கன்னிகைகள் பூஜை செய்தால் நல்லகணவரைக்
கூட்டுவிப்பேன்
கிரஹஸ்தர்கள் பூஜை செய்தால் கீர்த்தியுடன் வாழ
வைப்பேன்.
முமுக்ஷுக்கள் பூஜை செய்தால் மோக்ஷபதம் கொடுப்பேன்.

8. கோடி காராம் பசுவைக் கன்றுடனே கொண்டுவந்து
கொம்புக்குப் பொன்னமைத்துக் குளம்புக்கு வெள்ளிகட்டி
கங்கைக்கரை தனிலே கிரஹணபுண்ய காலத்தில்
வாலுருவி அந்தணர்க்கு மஹா தானஞ் செய்தபலன்

9. நானிளிப்பேன் ஸத்தியமென்று நாயகியுஞ் சொல்லுமே
அப்படியே ஆகவென்று திருமால் அறிக்கையிட்டார்
இப்படியே அன்புடனே ஏற்றித் தொழுவார்கள்
அற்புதமாய் வாழ்ந்திடுவார் பரதேவி தன்னருளால்!

ஓம் தத் ஸத் பிரம்மார்ப்பணம்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸூர்ய பகவான் ஸ்தோத்திரம்

1. கடலில் உதித்து வரும் கதிரவனை ஸதேத்தரிக்க
அலைகடலின் மெலெழுந்த ஆதியைப் பூஜைபண்ண

2. ஆனைமுகவா ஆறுமுகவா முன்வருவீர்!
திவாகரனார் கீர்த்திகளைச் சற்றே தெரிந்துரைக்க

3. நான்முகனார் தேவியரே நாவில்வர வேண்டுமம்மா!
புகழுடைய பாரதியே புஸ்தகத்தில் வாழ்பவளே

4. சதுர்வேத சாஸ்திரத்தின் தத்துவத்தின் உட்பொருளே
தத்துவத்தின் மெய்ப் பொருளே ஸரஸ்வதியே முன் வருவீர்!

5. கிழக்கில் உதித்து வரும் கீர்த்தியுள்ள மெய்ப் பொருளே
அடியேன் வினையகற்றி ஆட்கொள்ள வேணுமையா

6. தொட்டிலின் பிள்ளை சிசுக்கள் பிழை செய்துவிட்டால்
பிழையாக வெண்ணிப் பெற்றதாய் தள்ளுவளோ

7. அப்படிப்போலெண்ணி அடியேன் விண்ணயகற்றி
அஞ்சாமல் காத்தெனக்கு ஐக்கியபதம் தாருமையா

8. கதிரவனே மெய்ஞ்ஞானக் கண்கள் தரவேணுமையா
ஜோதி சுயம் வடிவே சுத்த வெளியானவரே

9. சித்த வெளியானவரே என்ஜோதிவெளியாக்கு மையா
சிஷ்யாள் மனத்தில் உதிக்கும் திவாகரரே

10. உண்டென்றார் பங்கில் உரையம் பரஞ்சோதி
இல்லையென்ற பாமரர்க்கு எட்டாத வஸ்துவே

11. ஜகத்திற்கதிபதியே ஸூரிய நாராயணரே
உலகதிற்கொருவரென்று உம்மையான்றோர்
சொல்லிடு வார்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

12. பிருதிவி ஏழுகடலும் பிரத்யக்ஷமாய் விளங்கும்
பிரத்யக்ஷதேவதையே (உம்) பாதஞ்சரணமையா!

13. இரக்ஷிக்கும் தேவதையே (உம்) இணையடியைப்
போற்றி செய்தேன்
என்னுடைய ஜன்மத்தையே ஈடேற்ற வேணுமையா!

14. (நான்) மாயை வலையில் மறித்து வந்து சிக்காமல்
பிறவாத மோக்ஷபதம் தாரீர் பெருமாளே!

15. உலகிலுள்ள மானிடர்கள் உய்யும்வழி காட்ட வென்று
கதிரவனைப் பூஜித்துக் கடைத்தேற வேணுமென்று

16. ஸூரியனைப் பூஜித்தார் ஸுந்தரிகள் மூவருமாய்
அன்னையெனும் பார்வதியும் அதிகாலையிலெழுந்து

17. ஈச்வரியாள் வந்தாள் இலக்ஷுமியின் தன்மனைவிக்குப்
பார்வதியாள் நல்வரவைப் பார்த்து மஹாலக்ஷுமியும்

18. (தன்) வண்டார் குழலசைய மாலைபுரண்டசைய
சீரார்சிலம்பார்க்கச் செங்கைவளை ஜோதிவிட

19. கழுத்துப் பதக்கம் மின்னக் கங்கணங்கள் ஜோதிவிட
மங்கை உமையவளின் மலரடியிலே பணிந்தாள்.

20. தண்டனிட்ட லக்ஷுமியைத் தேவிகண்டு அன்புடனே
மாதவனார் மார்பில் பிரியாமல் நீ வசித்து

21. வாழ்ந்திருக்கவென்று மங்கை உமை வாழ்த்தி விட்டு
காலையில் சென்றே நாம் கங்கைதன்னில் நீராடி

22. இமயகிரிமே லெழுந்த இளங்கதிரைப் பூஜைபண்ணி
வருவோம் நாமென்றழைக்கும் மாதுமையாள் சொற்படிக்கு

23. மகாலக்ஷ்மி தேவியாரும் வாணி ஸரஸ்வதியும்
ஸுரலோக மங்கையரும் ஸுந்தரி இந்திராணியுடன்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

24. சங்கரிதேவியுடன் சேர்த்து வந்தார் கூட்டமதாய்
வானாநதிக்கங்கை தன்னில் மங்கையர்கள் வந்திறங்கி

25. மஞ்சள் நீராடி வெண்பட்டால் ஈரமொற்றிக்
கோதிமயிராற்றிக் குழலுக்குப் பூமுடித்து

26. ரத்துகிலவிழ்ந்து ஏற்றமுள்ள பட்டுடுத்தி,
பத்தினிமார்களெல்லாம் பூஞ்சோலையில் புகுந்து

27. மல்லிகை முல்லை அரளி இருவாக்ஷியுடன்
செந்தாமரைப் பூவும் செங்கழுநீர் புஷ்ப்பமுடன்

28. ஆனமலர்களெல்லாம் ஆராய்ந்து தானெடுத்துத்
தேனுடனே முப்பழமும் செவ்விளநீர்க்குலையும்

29. தாம்பூலம் கந்தவதை தட்டினிலே கொண்டுவந்து
எட்டாப் பரம் பொருளின் கிட்டவே வந்து நின்றார்.

30. பருவதம்போல் விளங்கும் பசும்பொன்னால் தேர் விளங்க
முத்தால் அலங்கரித்து மாலைகளும் தொங்கவிட்டு

31. பவழக்கொடுங்கையுடன் பக்கத்தின் சக்கரமும்
தங்கத்தினாலமைந்த தட்டுக்களாயிரமும்

32. குந்தளப்பொன்னாலமைத்த குடை கொடிகள் தான் பிடிக்க
தங்க ரத்தினத்தா லிழைத்த சாமரைகள் வீசிவர

33. அருணனென்னுஞ்சாரதியும் ரதமுகப்பிலே அமர்ந்து
பச்சைக்குதிரை கட்டியதேர் தான் செலுத்த

34. சப்தமா தான்பூட்டித் தடந்தேரை ஓட்டிவர
அழகான தேர்நடுவில் ஆதித்தன் ஜோதிவிட

35. ஆயிரம்கிரணங்கள் ஜோதிவிட ஆதித்தன்
வஜ்ஜிர மணிமகுடம் முடியின் மேலே விளங்க

36. மஹாமேரு பருவதத்தை வளையவந்து பாஸ்கரனார்
உலகத்தேருய்ய உதயகிரி மேலெழுந்தார்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

37. பவனிவரும் ஸுரியரைப் பத்தினிமார்கண்டு உவந்து
அதிகப்பிரியத்துடனே அர்க்கியமுந்தான் கொடுத்தார்

38. பாதமலம்பி நல்லபட்டினால் ஈரமொற்றி
ஈரமுலரவென்றே இணைகவரியால் விசிறி

39. புஷ்பத்தால் அர்ச்சித்துப் போற்றியந்த புண்ணியரைக்
கனிந்த பழங்களையும் கதிரவனுக் கர்ப்பிதமாய்

40. நைவேத்தியம் பண்ணியும் நெய்விளக்குந் தானேற்றி
பன்னிருநாமத்தால் பகலவனைத்தான் துதித்தார்.

41. கிருபையுடனே ஸுரியரும் பூஜை தன்னைத்தான்கிரஹித்து
புவனேசுவரிகளையும் போற்றி மனமகிழ்ந்தார்

42. அவரவர்க்கு ஏற்றவரம் ஆதித்தனைக் கேட்டார்.
ஈசரிடப்பாகத்தை என்றும் பிரியாமல்

43. உடனாகவாழ்ந்திருக்க உமையைவளும் கேட்டிருந்தாள்
இலக்ஷுமிதேவி இச்சையுடனே யுரைப்பாள்

44. மாதவனார் தம்முடைய மார்பை விட்டு நீங்காத
வரமெனக்கு வேணுமென்று மகாலக்ஷுமி கேட்டிருந்தாள்

45. ஸரஸ்வதிதேவியுந் தான் சதுர் முகனார் தன்னுடைய
நாவைவிட்டு நீங்காத நன்மைகளைத் தாருமென்றாள்

46. ஸாவித்திரி ஸந்தியை காயத்திரி பிரம்மனுடைய
சிரஸை விட்டு நீங்காத சிலாக்கியத்தைக் கேட்டிருந்தாள்.

47. அயிராணியப்போல் அமரர்கோன் தன்னுடனே
சபையை விட்டு நீங்காத சுகந்தனையுங் கேட்டிருந்தாள்

48. அரிவையர்கள் கேட்டவரம் அப்படியே ஆகவென்று
கிருபையுடனே வாழ்த்திக் கதிரவனும்வாக்களித்தார்.

49. அழகான தேர்நடத்தி ஆதித்தன் சென்றிடவே;
ஸுந்தரிமார் களெல்லாம் தங்கள் கிரஹத்தையடைந்தார்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Haribaran Collection, Sholinganallur, Chennai

50. சூரியமாலையைச் சொன்னவரும் கேட்டவரும்
சொல்லிக் கொடுத்தவரும் சொல்லுவதைக் கேட்டவரும்

51. மைந்தர்களைப் பெற்றிடுவர்; மகிழ்ச்சியுடன் வாழ்ந்திடுவர்.
இவ்வுலகக்காக்ஷிகளும் இகபோகம்தானடைந்து
பக்திமனதுடனே பரதேவி தன் கிருபையால்
முக்திபதமான மோக்ஷத்தைத் தானடைவார்.

ஓம் தத் ஸத் பிரம்மார்ப்பணம்

பரமாத்மா திருப்பள்ளி எழுச்சி

பரமாத்மா வணக்கம்

1. மதுக்ஷீரம் பலகனிகள் நாளிகேரம் க்ஷுகண்டம்
நல்லமோதகப் பணியார வகைகள்
ஆதரவாய் நான் படைப்பேன் ஆவுடையாள் திருமகனே
மரகதமான கணபதி காப்புத்தானே

2. சந்ததமும் என் நாவில்வந்துதவி செய்யும் அம்மா
காயாம்பூ ஸரஸ்வதியே சியாமளையே !
தக்ஷிணா மூர்த்தியே ஸ்ரீ குருயோகியே
ஸ்வாமிகள் ஸமாதி கொலுவோ !

ஜீவன் முக்தர்களின் உதய காலம்

3. அஞ்ஞான இருள் பிரிந்து அறிவு தயமாகின்றது
விஞ்ஞான சூரியன் உதித்தார்-
ஜாக்ரத்ஸ்வப்பன ஸுஷுப்தி என்ற இராத்திரியுங் கழிந்து
ஸ்வாமிகள் தோதயமானேன் ஐயாவே !

4. ஜோதிர்மயமாகும் வ்ருக்ஷம் ஜொலித்துமலர்சொரிகின்றது
(திட) ஞானபரிபக்குவமாகின்றது.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வைராக்கியக் குயிலினங்கள்(ஞான)மதுஸாரக்கனிகோதி
தத்வமஸி என்று கூவி நிற்கின்றது.

5. ஓங்காரமானதென்றல் வாடை நன்றாய் வீசுகின்றது
சுயஞ்சோதி ஆதித்தியனுதித்தார்
பரிபூர்ண மேடைமேல் பராபர ஹம்ஸங்கள்
நற்பிரணவப் பலனைத்தான் பூஜித்து;

6. ஹம்ஸோ(அ)ஹம்சிவோ(அ) ஹம் பாவனைகள் பண்ணியே
அஹம் பிரம்மாஸ்மி என்று கூறுகின்றது
தக்ஷிணா மூர்த்தியே ஸ்ரீ குருயோகியே
ஸ்வாமிகள் ஸமாதி கொலுவோ!

7. 'மஹத்துக்கள் பிரும்ம நிஷ்டாள் பாலவிருத்தாள்
மஹாயோகி
குருஸ்வாமியின் தரிசனந்தேடி நின்றார்கள்
அகண்டாகார ஆனந்த லக்ஷ்மியுடனே
ஐக்கியபோகம் ஆனேன் ஸ்வாமி குருவே!

8. காமக்குரோத லோபமோக மதமாச்சர்யம் மமதை டம்பம்
அவித்தையுடன் ஆங்காரம் ஈஷனைகள் மூன்றும்
(இந்த) விபரீத சத்ருக்களை வேர்களைந்து நாள் ஜபித்து
ததாகார ராஜ்ய ஜயமானேன் ஐயாவே!

9. உபதேசதாரக அருக்கன் வந்து உதித்தவுடன்
ததாகாரமான வெளியானேன் ஐயாவே!
தக்ஷிணா மூர்த்தியே ஸ்ரீ குருயோகியே
ஸ்வாமிகள் ஸமாதி கொலுவோ!

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri.V.Hariharan Collection, Sholinganallur, Chennai

ஜீவன் முக்தர்களின் உதய ஸ்நானம்- ஜபம்

10. ஸாதன சதுஷ்டயாள் ஸத்புருஷாள் மஹாயோகி
தங்கள் ஸத்தான பத்தினிகளுடனே
ஸச்சிதானந்த நதியில் நித்யமாக நீராடி
ஸத்தியமென்ற காயத்திரி ஜபித்து;

11. நிஷ்காம்யமாகவே நித்திய கருமம் செய்து
பிரம்மார்ப்பணங்கள் செய்து நிற்கின்றார்.
தக்ஷிணா மூர்த்தியே ஸ்ரீ குருயோகியே
ஸ்வாமிகள் ஸமாதி கொலுவோ!

ஜீவன் முக்தர்களின் அக்னி ஹோத்ரம்

12. லக்ஷணாத்திரயங்களென்னும்
மதன தண்டந்தனைப் பிடித்து
தத்பத த்வம்பதமென்ற அரணிக்கட்டையில்
சிரவண மனன நிதித்யாசனத்தால் -
மதனம்பண்ணி ஜ்வாலையாக்கி
ஸாக்ஷாத்காரமென்னும் ஜ்வாலை வளர்த்து;

13. அகண்டாகாரமென்ற அக்கினி குண்டத்தில்
ஆஹுதிகள் பண்ணி நிற்கிறாள்
தக்ஷிணா மூர்த்தியே ஸ்ரீ குருயோகியே
ஸ்வாமிகள் ஸமாதி கொலுவோ !

ஜீவன் முக்தர்களின் யாகம்

14. ஜீவேச்வராளென்றே தீக்ஷிதரும் அத்வர்யுவம்
சின்மாத்திர யாகம் பண்ணத் தீக்ஷிவகித்து
ஆகாம்யஸஞ்சி தவர்ணாசிர மங்களென்ற
கர்மப் பிராப்த பசுவை

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

15. ஞானமென்ற பரசினால் கண்டங் கண்டமாய்த் துணித்து
ஜோதியாகும் வபையை எடுத்து
ஞானயோக சமாதியினால் பிரபலாக்கினி வளர்த்து
பரிபக்குவமாகச் சமைத்து

16. புண்ய பாவங்களென்ற ஆச்சியந்தனைச் சொரிந்து
புரோடாச பிண்ட ஹவிஸ்ஸை
அகண்டாகாரமென்ற அக்கினி குண்டத்தில்
ராஜபோக அத்வர்யர்கள் சூழ;

17. ஹம்ஸஸ்ஸோ (அ) ஹம் ஸோ (அ) ஹமென்று
அவயமிட்டுக் கோஷமாய்
ஆஹுதிகள் பண்ணி நிற்கிறாள்
தக்ஷிணா மூர்த்தியே ஸ்ரீ குருயோகியே
ஸ்வாமிகள் ஸமாதி கொலுவோ!

ஜீவன் முக்தர்களின் பூஜை

18. ஜோதிர்மயமாய் ஜ்வலித்து தாவள்யமாய் விளங்கும்
ஸாக்ஷாத்கார ஸ்படி கலிங்கத்தை
ஸித்தர்கள் திடஜ்ஞானி ஸனகாதி யோகியர்கள்
தியான யோக ஸமாதியினாலே

19. தானே விசாரித்து ஸ்வானுபோக அனுபவத்தால்
ஆவாஹனமும் பண்ணினாள்
ஜன்மமிருத்யு ஜரைவியாதி கர்மபந்தம் அஞ்ஞான
நிர்மால்யந் தன்னைக் களைந்து

20. நிர்க்குண நிர்விகல்ப நிரஞ்சன ஸிம்ஹாசனத்தில்
அலங்கரித்து எழுந்தருளப்பண்ணி
சுத்தோதகமாகும் ஸத்தியகங்கை கொண்டுவந்து
தாராபிஷேகங்கள் பண்ணி,

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

21. ஜோதிர்மயமாய் ஜ்வலித்து தாவள்யமாய் விளங்கும்
பீதாம்பரமுஞ் சாற்றி
விபுவாய் நிறைந்தவர்க்கு விபூதி ருத்ராக்ஷம்
யஜ்ஞோபவீதமுஞ் சாற்றி,

22. அதிசீ தளமாயிருக்கும் பரிமள கந்தங்களை
அவங்காரமாகப் பூசி
ஸத்துச்சித்தானந்தக் கிரீடகுண்டலங் கண்டஸரம்
ஸர்வாபரணங்களும் பூட்டி,

23. ஆதியந்தமற்றவருக்கு அர்க்கியங்கள் தான் கொடுத்து
அன்பென்னும் மலர் தன்னைச் சாற்றி,
அகண்டாகாரமான தூப தீபங்காட்டி
அக்ஷதை திலகமுஞ் சார்த்தி,

24. அண்டாண்ட பிரம்மாண்ட யுக யுகப் பிரளயங்களை
மஹாநைவேத்தியமாகப் பண்ணி
ஹம்ஸோ (அ)ஹம் ஹம்ஸோ (அ) ஹம்பென்னும்
கற்பூரதீபங் காட்டி ஐக்கிய நமஸ்காரமும் பண்ணி,

25. தக்ஷிணா மூர்த்தியே குருவாய்வந்து என் செவியில்
தாரகோபதேசஞ் செய்தபின்
நித்தியானந்தமடைந்து (இந்த) தேகந்தனையும் மறந்து
நிராகர வெளியானேன் ஐயாவே !
தக்ஷிணா மூர்த்தியே ஸ்ரீ குருயோகியே
ஸ்வாமிகள் ஸமாதி கொலுவோ!

ஓம் தத் ஸத் பிரம்மார்ப்பணம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வேதாந்த உதயராகப் பாட்டுகள்

(ஜீவன் முக்தர்களின் உதயகாலம்)

உதய ராகம்

1. உதயமாச்சுது ஹிருதயந் தெளிந்தது
உந்தன் தரிசனமாச்சுது
பிரமைகளாகின்ற மாயை ஒழிந்தது
பரிபூரணமாய் மனம் நிறைந்தது.

2. மாயையாகின்ற இருள் பிரிந்தது
மதியான் சூரியன் உதித்தது
காயக்கொடிவேர் அற்றுப் போச்சுது
கர்மம்.விட்டு வெளியாச்சுது.

3. பாசமாகின்ற பணியும் தெளிந்தது
பிரகாசம் வந்து அண்டம் நிறைந்தது
கிலேச மற்றதோர் திவாகரனும் உதித்து
ஹிருதயாகாசம் எங்கும் வெளியாச்சுது.

4. காமமென்கிற கள்ளர்பயத்தினால்
கலங்கி நிற்கின்ற ஜீவர்க்கு
நேமமம் பரயோக நிஷ்ட்டையால்
காமாதிகள் ஓடிப்போச்சுது.

5. விஷயமாகும் நக்ஷித்திரங்கள் மறைந்தது
விவேகமாம் நிலந்தெளிந்தது
அஹம் பிரம்ம நிலைதனை அடைந்து
அருள் அருண உயமாச்சுது

6. தொண்ணூத்தாறு தத்துவமாகும் கொடிகளும்
சன்ன பின்னலாய்ச் சூழ்ந்தது

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

சித்தந் தெளிந்தோர் ஞான சக்தியால்
வெட்டியே அறுபட்டுப் போச்சுது.

7. வேதநால்கடலும் அலைவந்தடிக்குது
விளங்கும் சின்மயானந்தம் பெருகுது
நாதமென்னும் ஓங்கார சப்தத்தால்
நரக்ககுழி தூர்ந்து போச்சுது.

8. ஞானநதி தன்னில் ஸ்நானம் பண்ணியே
மௌன வெண்பட்டு உடுத்தியே
தியானமாகும் விபூதி உடம்பெங்கும்
தரித்தேன் பரிபூரணமாவே.

9. ஞானக்கோபுர உச்சிமீதனில் ஸகஸ்ரகல தளத்திலே
ஜீவன் நான் பரமாத்ம மூர்த்தியை ஸேவித்தே
ஐக்கியமாகினேன்

உதய ராகம்

1. அக்கியானமாகின்ற நித்திரை தெளிந்து போச்சு
பிரக்கியான ஜாக்கிரதை கண்டதே
விஞ்ஞானமாகின்ற சூரிய உதயமாகி
வெய்யிலுங் கூடத்தில் வந்ததே.

2. சிரவணமென்கிற வீட்டில் சாணந்தெளியாமல்
தத்துவக் குப்பை கிடக்குதே
(அதைச்) சேர்த்துத்திரட்டி எடுக்கத் தெரியவில்லை
(ஜக)தீஸ்வரா! என்ன செய்குவேன் ?

3. காயமாகின்ற வீட்டில் எண்ணித்தொலையாத
காரியங் கிடக்குது ஈஸ்வரா !
ஞாயமோநானிந்தப் பாட்டுக்கிலக்கானேன்
நாமினி நீருக்கிலேசப்படலாமோ ?

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

4. பிராரப்தமாகின்ற கடன்காரன் மறியலாய்
பாடிருக்கான் தலைவாசலில்
யாரைப்போய் நல்லது சொல்லுவேன் நானிப்போ
யாரும் அதை விலக்க வில்லையே.

5. விரக்திஎன்ற பர்த்தா வெளியிலே புறப்பட்டால்
விலங்கிடுகின்றார் இருகாலிலும்
துரத்தியடிக்கின்ற காலமோ வேளையோ
சோதனையோ இது ஈஸ்வரா !

6. கைவல்யமாகின்ற கர்ப்பம் வயிற்றினில்
கல்லும்போல் மெத்தக் கனக்குதே
செய்யுங் கருமங்கள் ஒன்றுந் தெரியவில்லை
தெய்வமே நானென்ன செய்குவேன் ?

7. போதமாகின்ற பிள்ளை பின்னுடன் தொடருது
சிரவணாமாகுங் ஸ்தன்யம் தரச்சொல்லிப்
பாதத்தைக் கட்டியே பாலனழுதிட்டால்
பார்ப்பது எப்படிக் காரியம் ?

8. கொண்டி மனப்பசுவை அண்டமுடியவில்லை
தொண்டு கழுத்தினில் கட்டியே
அண்டமளந்த கோபாலருடன் சொல்லிக்
கொண்டு விடவேணும் அதனையும்

9. அண்டாத சம்ஸார பிராப்த வலைதனில்
அகப்பட்டுக் கொண்டு விழிக்கின்றேன்
தாண்டவருபாரும் ஆண்டவரே ! எங்கள்
ஸ்வாமி குரு வெங்கடேஸ்வரா !

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy;

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஜீவன் முக்தர்கள் விரத்தி

உதய ராகம்

1. அஸ்திகடிக்கும் ச்வானம் போல் அறிவழிந்து
நாஸ்தியாமிந்த ஜகத்திலே
தத்தி விழுந்தோடும் ஜீவா உனக்குநற்
புத்தி சொல்லுவேன் இப்போ கேட்பாயோ ?

2. மூலாதாரமான சைய பர்வதந்தொட்டு
ஸகஸ்ரார பிரமாந்திர பரியந்தம்
பக்தாளும் முக்தாளும் சாக்தாளும் தேவாளும்
அத்தனைபேரும் வசிக்கின்றார்

3. காணும் பிரபஞ்சங்கள் எல்லாங் கடம்போலே
நாசமாகுமென்று பார்த்திடாய்
தோணும் சிதாகார சைதன்ய வஸ்துவை
சுகசொரூபமென்று அறிந்திடாய்

4. விதவாபூஷணம்போல அன்யசாஸ்திரங்கள்
வியர்த்தமாகுமென்று அறிந்திடாய்
பரமாயிருக்கின்ற அத்வைத சாஸ்திரத்தைப்
பார்த்தே கிருதார்த்தனாய்ப் பஜித்திடாய்
நாதமென்னும் ஓங்கார சப்தத்தால்
நரகக்குழிதூர்ந்து போச்சுது

5. சோதிர்மயமான ஸுஷும்னா நாடியில்
சுத்தமாங் காவேரி தன்னிலே
சூஷ்ம தேகத்தினால் ஸ்நானஞ் செய்தால் பத்மம்
பிரகாசிக்கும் ஹிருதயந் தன்னிலே

6. உலகம் பதினாலும் உன்னுடைய ஹிருதயத்தின்
உள்ளேயிருக்கும் தென்றே சொல்லி

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

உத்தரகீதையில் ஸ்வாமி பார்த்தனுக்கு
உபதேசம் பண்ணி இருப்பதால்

7. சேதுவுங் காசியும் கும்பகோணமும்
ஸ்ரீரங்கம் ஜம்புகேஸ்வரமும்
திருவையாறும் மத்தியார்ச்சுன மாயூரமும்
(உன்) தேகத்தில் உண்டென்று பார்த்திடாய்

8. கிடைத்த சிந்தாமணி விட்டுவிட்டுக் காலில்
கச்சாமணி தேடும் பிராந்தம்போல்
சொல்லச் சோர்வில்லாத சுவானு போகத்தைவிட்டு
அல்லலாம். கர்மத்தில் அலையாதே

9. ஸ்ரீ வெங்கடேச குருவையும் சிந்தித்து
தக்ஷிணா மூர்த்தியை சேவிப்பாய்
பிரீதியுடனே அனுக்கிரஹம் பண்ணுவர்
பிரம்மாகவே உன்னைப் பாவிப்பாய் !

ஜீவன் முக்தரின் ஆறாதார தேவதைகள்

வணக்கம்

உதய ராகம்

1. கண்டு தொழுதேன் அகண்டந் தன்னிலே
காலபயந் தீர்த்த கண்டரை
அண்டர் போற்றிடும் புண்டரீ கரை
ஆதிபரப்பிரம்ம மூர்த்தியை - கண்டு தொழுதேன்.

2. மூலாதாரத்தில் முக்தி கணபதி
மூஷிகந்தன்னில் ஏறியே
நாதம் முழங்கவே நாலுதளத்திலே
வல்லபை சக்திநாதனைக் - கண்டு தொழுதேன்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika·Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

3. சுவாதிஷ்டடானத்தில் ஸரஸ்வதி பிரம்மா
ஸரோருஹம் ஆறு தளத்தினில்
ஹம்ஸவாகனந் தன்னிலேறியே
அகிலம் ஸிருஷ்டிக்கும் நாதனைக் கண்டு தொழுதேன்.

4. மணிபூரந்தனிலே மஹாவிஷ்ணுலக்ஷ்மி
மட்டில்லாத தச தளத்திலே
மணியணிபூட்டிய கருடன் மீதினில்
அறிவும் சொரூபனாம் ஆதியைக் கண்டு தொழுதேன்.

5. அனாஹதமென்ற மண்டபந்தன்னில்
ஆனபனிரண்டு தளத்திலே
ரிஷப வாஹனந் தன்னிலேறியே
பார்வதி பரமேசரைக் கண்டு தொழுதேன்

6. பக்தியுடன் வந்து பதஞ்சலி வியாக்கிரர்
ஏற்றியே பூஜை பண்ணவே
இஷ்டமுடனென்னைக் காத்து ரக்ஷிக்கும்
எங்கள் பார்வதிநாதரைக் கண்டு தொழுதேன்.

7. விசுத்தியாகின்ற மண்டபந்தன்னில்
விசித்திரம் பதினாறு தளத்திலே
ஜீவ வாகனம் தன்னிலேறியே
ஜீவாத்மாவுடன் ஐக்கியமாம் கண்டு தொழுதேன்

8. ஆதாரமாய் மூலப்பிரக்ருதிப் பிரபஞ்சத்தை
அடக்கியே உள்ளே ஆனந்தம்
ஆக்ஞையிலிருந்து அண்டமீரேழும்
காத்து அளிக்கும் எங்கள் நாதனைக்கண்டு தொழுதேன்

9. சுப்பிரகாசரை ஜோதி சொரூபரை
சொல்லுக் கெட்டாத பரப்பிரம்மத்தை
அப்பிரகதசரை அகண்ட ரூபரை
ஆதியந்தமற்ற ஜோதியைக் கண்டு தொழுதேன்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஹரிஹரீ ஸ்தோத்திரம்

1. ஓதக் கடலில் உதித்தீர் ஹரிஹரி
உலகத்துக் கொருவனாய் நின்றீர் "
பச்சைநிற ஆலிலைமேல் படுத்தீர் "
பசுங் குழந்தை ரூபமாய் இருந்தீர் "

2. இச்சித்த ரூபம் எடுத்தீர் "
இறப்பும் பிறப்பும் தவிர்ப்பீர் "
பச்சை நிறமுள்ள எந்தன்மாலே "
பக்ஷமுடன் இரட்சிக்கும் கிருஷ்ணா! "

3. பாற்கடலில் பள்ளிகொண்டிருந்தீர் "
பங்கஜ லக்ஷ்மியின் நாதா ! "
பூதேவிபாரம் பொருக்காதே "
பிரம்மாவிடம் வந்து சொன்னாள் "

4. தேவர்களும் ரிஷிகளும் கூடி ஹரிஹரி
க்ஷீராப்திக் கரை தன்னிலே வந்தாள் "
ஜகன்னாதா! உம்மை துதித்தாள் "
சரணாம் புஜங்களில் பணிந்தாள் "

5. தேவர்களுக் கபயம் அளித்தீர் "
சேஷரையும் அண்ணராய்க் கொண்டீர் "
(ஸ்ரீ) கிருஷ்ணபலராமனாய் ஜனித்தீர் "
கிருபையுடனே ரக்ஷிக்க வேண்டி "

6. தேவகியின் கர்ப்பகத்தில் வந்தீர் "
திருமுகத்தைக் கண்டு மகிழ்ந்தாள் "
சந்திர உதயம் போல் பிறந்தீர் "
சதுர்ப்புஜ மூர்த்தியாய் நின்றீர் "

7. தேவாதி தேவரென்று கிருஷ்ணா "
தேவகியும் மகிழ்ந்து துதித்தாள் "

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வஸுதேவர் விரும்பி துதித்தார் "
மர்மமாய்க் கொண்டொளிக்கச் சொன்னீர் "

8. வஸுதேவர் விலங்கெல்லாம் முறிய "
வாசலெல்லாம் தாள்கள் திறக்க "
மைந்தரைத் தோளில் எடுத்தே "
வழிவிட யமுனையும் வந்தார் "

9. கோகுலந்தன்னில் வந்து கிருஷ்ணா! "
கோபியசோதை கிரகத்தில் புகுந்தீர் "
மங்கை யசோதையிடம் விட்டார் "
மாய்கைப் பெண்ணைக்கொண்டு வந்தார் "

10. தேவகியிடம் விட்டுச் சிசுவைச் "
சோகத்துடன் வருந்தியிருந்தார் "
மாபாவி கம்ஸனிதைக் கேட்டான் "
வாளுருவிக் கொண்டோடி வந்தான் "

11. தேவகியும் அணைத்திருந்த சிசுவை ஹரிஹரி
திடுக்கிட்டு நடுங்கிடவே பிடுங்கி "
கடும் கோபத்துடன் கூடக் கம்ஸன் "
கற்பாறை தன்னிலே அறைந்தான் "

12. பாறைதன்னில் விழாமல் மாயை "
பாய்தெழுந்து அந்தரத்தில் போனாள் "
உன்னைக் கொல்லவந்த மாயன் "
ஒளிந்து விளையாடுகிறான் என்றாள். "

13. என்னைக் கொல்லவுனக்கு எளிதோவென்றே "
ஈஸ்வரியாள் மாய்கைசொல்லி இகழ்ந்தே "
மாய்கைசொல்லி அந்தரத்தில் மறைந்தாள் "
மதிகலங்கிக் கம்ஸன் மனைசென்றான் "

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

14. கோகுலந் தன்னிலே யசோதை "
குழந்தையைக் கண்விழித்துப் பார்த்தாள் "
பச்சைமுகில் மேனியனைக் கண்டே "
பரவசமாய் எடுத்து அணைத்துக்கொண்டாள் "

15. நந்தபோகர் மகிழ்ந்து கிருஷ்ணா "
நன்மையுடன் நீராடி வந்தார் "
புத்திரனை எடுத்துக் கொண்டே "
பொன்னுறைத்து நாவிலிட்டுப் போற்றித் "

16. திருமஞ்சனமாட்டிச் சிறப்பாய்த் "
திருமுலைப் பாலமுது தந்தாள். "
கோபாலர் கோபிகைகள் கூடி "
குழந்தையைக் கண்டு மனம் மகிழ்ந்தாள் "

17. ஜாதகர்மம் நாமகரணஞ் செய்தார் "
கங்கையற்ற தானங்களைத் தந்தே "
விரை தானம் கோதானம் கிருஷ்ணா "
வேதியருக்களித்து நந்தர் மகிழ்ந்தார். "

18. நந்தருடைமாளிகையில் மகிழ்ந்தே ஹரிஹரி
ராமருடன் ரோகிணியுமிருந்தாள் "
யசோதையுடன் ரோகிணியுஞ்சேர்ந்தே "
ஸ்ரீகிருஷ்ண ராமனென்று சொல்லி, "

19. கீர்த்தியுள்ள நாமத்தையிட்டாள் "
கற்காசரி வந்து போனார். "
அன்னையென்னும் யசோதை மகிழ "
அன்புடனே கோகுலத்தில் வளர்ந்தீர் "

20. பொல்லாத கம்ஸன் அனுப்பப் "
பூதனையுங் கோகுலத்தில் வந்தாள் "
பூதனைப் பேய் முலையை உண்டீர் "
பாலுடனே அவளுயிரைத் தின்றீர். "

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

21. சென்றவளுக்கு மோக்ஷங் கொடுத்தீர் "
திரும்பாத பதவியளித்தீர். "
சகடாஸுரனை வதைத்தீர் "
சிதறி விழவே மடித்தீர், "

22. சுழல்காற்று அஸுமரனும் தோன்றி "
சிசுவை எடுத்தோடிச் சென்றான் "
சிசுவுங் கனமாகவே கிருஷ்ணா "
திருணாவர்த்தன் விழுந்தங்கே மடிந்தான். "

23. அன்னையுடை ஒக்கலையிலிருந்தே "
அம்புலியைத் தாவென்றெழுதீர் "
அன்னை மயக்கியிருக்கக் கிருஷ்ணா "
அம்புலியைக் கிட்ட அழைத்தீர். "

24. மானிடக் குழந்தையைப் போல் கிருஷ்ணா "
மண்தின்னும் பாவனையாய் நின்றீர் "
மைந்தரென்ற பாவனையால் யசோதை "
மலர்க் கையை ஓங்கி வந்தாள். "

25. பயந்தவர் போல் வாயைத் திறந்தீர் ஹரிஹரி
பாருலகு ஜகமெல்லாம் பார்த்தாள் "
பரவசமாய்த் திகைத்து அன்னை பார்க்கப் "
பாலனென்ற பாசத்தையடைந்தாள். "

26. மத்தியிட்டுத் தயிர் கடைய மாதா "
மடியிலிருந்து பால்தாவென்றழுதீர் "
தாங்கியன்னை மடியில் வைத்துக் கிருஷ்ணா "
தன்முலைப்பா லமுதம் தந்தாள். "

27. தாழிப்பால் பொங்கிவரக் கிருஷ்ணா "
சடுதியிலே உம்மை விட்டுப்போனாள் "
தண்டையுடன் வெண்டையமுங் குலுங்க "
தயிர்த்தாழி தனைக்காலால் உதைத்தீர். "

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

28. தவிழ்ந்து நீர் மறைந்துவிடக் கிருஷ்ணா "
தெருவெல்லாம் தேடித் தொடர்ந்தாள். "
வீதியெல்லாம் கூட வந்து கிருஷ்ணா "
விளையாடி வழி மறைத்துப் பிடித்தாள். "

29. திருடனிந்தக் கிருஷ்ணனென்று சொல்லி "
சிட்சிக்க வேணுமென்று நினைத்தாள். "
உரலுடனே அணைத்து உன்னைக்கட்ட "
இருவிரல் கடை குறையக் கொண்டாள். "

30. தள்ளாடி அன்னையைப் போலவே நடந்தே "
அணைக்கயிற்றைக்கொணர்ந்து பிணைத்தாள் "
தாமோதரா வுன்னைக் கட்டி "
தன்னுடைய வேலைக்குப் போனாள். "

31. உரலுடனே தவழ்ந்துருண்டு கிருஷ்ணா "
உயர்ந்த மருதமரத்தை உதைத்தீர் "
நளகூபர் எழுந்தும்மை ஸ்துதிக்க "
நன்மையுடன் நற்கதியு மளித்தீர். "

32. மருதமரம் முறிந்து விழக் கிருஷ்ணா ஹரிஹரி
மாதாவும்தான் பயந்து வந்தாள். "
அர்ச்சுன விருக்ஷங்களையும் பார்த்தாள் "
அதனண்டையில் நீவிளையாடக்கண்டாள். "

33. தந்தையந்த நந்தர் வந்து பார்த்தே "
தழுவியும்மையெடுத்து அணைத்துச் சென்றார் "
பாலனுக்குத் திருஷ்டி சுற்றிப்போட்டார் "
பாலலீலை தன்னைக்கண்டு பயந்தெளிந்தார். "

34. அன்புடடைய தாய் தந்தை மகிழ "
அங்காடிப் பழம் வாங்க வந்தீர் "
அங்கையில் ஜம்பூபழம் கொண்டீர் "
அவள் மகிழப் பாக்கியமளித்தீர். "

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

35. பிருந்தாவனமடைந்து கிருஷ்ணா "
பாலருடன் பசு மேய்க்கப் போனீர் "
கன்று உருவங்கொண்டு வந்து அஸுரன் "
கலங்கி விழிக்கையில் வதைத்தீர். "

36. கொக்காஸுரன் வந்து கொத்த "
கோரைறைப்போல் கிழித்துக் கொன்றீர் "
மலைப்பாம்பு போலிருந்த அவனை "
வாய்க்குள் புகுந்தவனை வதைத்தீர் "

37. ஆறாம் வயது முதல் கிருஷ்ணா "
அழகாகப் பசு மேய்க்கப் போனீர் "
கோபியர்கள் கிரகமெல்லாஞ் சென்றீர் "
கடைந்த வெண்ணெய்பால் தயிரும் உண்டீர். "

38. உரியில் வைத்த சட்டியை உடைத்தீர் "
தயிர்பாலைத் தோழருடன் குடித்தீர் "
பதுங்கி நின்ற பூனைக்கும் போட்டீர் "
புறமிருந்த குரங்குகளும் புசிக்க. "

39. முத்தணிந்த கோபியர்கள் கூடி ஹரிஹரி
முறையிட்டுச் சொல்லி கொண்டாள் "
துஷ்டனிவனென்று சொல்ல யசோதையால் "
பக்ஷமுடன் சிக்ஷிக்கப்பட்டீர். "

40. கோபால பாலருடன் கூடி "
குழலூதி விளயாடிக் கழித்தீர் "
யமுனா நதிக்கரையிலாடி "
இன்பமுடன் ததியன்னம் உண்டீர் "

41. பாலருடன் கன்றுகளைப் பிரம்மா "
பாராமல் கொண்டொளித்துப் போட்டார் "
நான்முகரும் அதிசயிக்கக் கிருஷ்ணா "
நன்றாகச் ஸிருஷ்டி பண்ணிக்கொண்டீர். "

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

42. வருஷமொன்று சென்றவுடன் பிரம்மா "
மறைந்திருந்த கன்றுகளை விடுத்தார் "
கொண்டொளித்த கோபாலர்கூடி "
கிருஷ்ணாவென்று கூவிவந்தார் "

43. மாய்கையினால் ஸிருஷ்டித்த பாலர் "
மஹிமையுள்ள உம்மிடத்தில் மறைந்தார் "
பழக்கமுள்ள பாலருடன் சேர்ந்தே "
பக்குவமாய் அன்னம் புசித்தீர் "

44. காட்சிகளைக் கண்டிருந்த பிரம்மா "
கிருஷ்ணா உம்மைக் கண்டு புகழ்ந்தார் "
பகவான் உம்மைக் கண்டு பணிந்தார் "
பிரம்மாவும் தன்னுலகம் போனார் "

45. பிரிந்திருந்த கன்றுகளைப் பார்த்தீர் "
பாலருடன் கோகுலத்தில் போனீர். "
கிரங்கங்களைச் சேர்த்தவுடன் கிருஷ்ணா "
கோபாலரெல்லாம் உம்மைப் புகழ்ந்தார் "

46. தேனுகாசுரனை ஜயித்தீர் ஹரிஹரி
தோழருடன் பனம்பழம் புசித்தீர் "
துஷ்டர்களை ஸம்ஹரித்துப் போட்டீர் "
இஷ்டர்களை காப்பாற்றி யிருந்தீர் "

47. காளியன் முடியில் விளையாடிக் "
கருணையுடன் மழை தடுத்துக் காத்தீர் "
கோவர்த்தன கிரியைத் தாங்கித் "
கருணையுடன் மழை தடுத்துக் காத்தீர் "

48. கொண்டாடிப் புரந்தரனும் வந்தே "
கொவிந்தாவென்றே துதித்தான் "
பிரம்பனென்ற அஸுரனைக் கிருஷ்ணா "
பலராமனால் கொன்று போட்டீர் "

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

49. கோபிகைகள் சேலைகளைக் கொண்டே "
குளிந்தபுன்னை மரத்தில் ஒளிந்தீர் "
வேணுகானஞ் செய்த கிருஷ்ணா "
விளையாடி ஜலக்கிரீடை செய்தீர் "

50. கோபியர்கள் மனங்குளிரக் கிருஷ்ணா "
கிரீடை பண்ணிக் கிருபையுடனிருந்தீர். "
பக்தியுள்ள கோபியர்கள் துதிக்க "
பிருந்தாவனத்தில் சஞ்சரித்தீர். "

51. குழலூதி கோபியரை மயக்கி "
கோபால ராஸகிரீடை செய்தீர் "
கோவிந்தா ! உன் குணங்களைப் பாடி "
கோபிகா கீதங்களைச் சொன்னான். "

52. குதிரைமுக அஸுரனையுங் கொன்றீர் "
வியோகமாஸுரனை வதைத்தீர் "
மலைக்குகையின் பாலர்களை மீட்டிர் "
மகிழ்ச்சியுடன் விளையாடி வந்தீர் "

53. அரிஷ்டனென்ற அஸுரனை அழித்தீர் ஹரிஹரி
அவனுடைய கருவத்தை ஒழித்தீர் "
அக்ரூரர் வந்தழைக்கக் கிருஷ்ணா "
அண்ணருடன் தேரேறிச் சென்றீர் "

54. அக்ரூரர் துதித்திடவே கிருஷ்ணா "
அணிரதத்தில் அண்ணருடனிருந்தீர் "
காளிந்தி நதிக் கரையில் கிருஷ்ணா "
காட்சியுள்ள விஸ்வரூபங் கொண்டீர் "

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அக்ரூரர் பகவான் அவதாரங்களைச் சொல்லித் துதித்தல்

55. அக்ரூரர் விஸ்வரூபங் கண்டார் "
அதிசயித்துப் பரவசமடைந்தார். "
வைகுண்டர் வைபவத்தைக் கண்டே "
வணக்கமுடன் பணிந்தே துதித்தார். "

56. ஆதியுமனாதியுமாய் ஆனீர் "
அகில ஸிருஸ்டிஸ்த்திதி லயஞ்செய்தீர். "
பிரகிருதியென்னும் பெட்டகத்திலிருந்து "
பிரம்மாவும் உன்னிடம் உதித்தார் "

57. மாயைக்கும் எட்டாத விஷ்ணு "
முக்குணங்களற்றிருக்கும் மூர்த்தி "
மத்ஸ்யாவதாரம் எடுத்தீர் "
மனுவைப் பிரளயத்தில் காத்தீர். "

58. மதுகைபட அஸுரர்களை வதைத்தீர் "
மலாயன் மயக்கம் ஒழித்தீர். "
ஹயக்கிரிவ மூர்த்தியாய் நின்றீர் "
அன்பர்களுக்கு உபதேசஞ் செய்தீர் "

59. கூர்மாவதாரம் எடுத்தீர் "
கிரிதாங்கி அமிர்தம் கடைந்தீர் "
வராஹவதாரம் எடுத்தீர் ஹரிஹரி
விளையாட்டாய் அஸுரனை வதைத்தீர் "

60. நரஸிம்மராய்த் தூணில் உதித்தீர் "
நடுங்க இரணியனைப பிளந்தீர் "
வாமனராய் வந்து உதித்தீர் "
மாபலியை வஞ்சித்துப் போட்டீர். "

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

61. பரசுராமனாய் அவதரித்தீர் "
பகைத்த அஸுரர்களை வதைத்தீர். "
தசரதருக்கு மைந்தராய் வந்தீர் "
தம்பியர்களுடன் கூடப் பிறந்தீர் "

62. தருமந் தழைத்தோங்க ஸ்ரீராமர் "
சத்தியத்தை நிறைவேற்றி நின்றீர் "
கொடியவளாந் தாடகையை முடித்தீர் "
கௌசிக முனிவரின் யாகத்தைக் காத்தீர் "

63. மாரீசனைக்கடலில் தள்ளி "
மகாமுனியின் யக்ஞம் முடித்தீர். "
அகலிகையின் சாபம் துடைத்தீர். "
அவள் ஜென்மம் ஈடேறச் செய்தீர் "

64. ஜனகரிடமிருந்த வில்லை யொடித்தீர் "
சீதையை மாலையிட்டு வந்தீர் "
பரசுராமன் வில்லை முறித்தீர் "
பலத்துடனே அவர் தபஸை யடைந்தீர் "

65. பிதுர் வாக்கியம் நிறைவேற்ற ராமா "
பதினாலு வருஷம் வனம் போனீர். "
தண்டகா வனஞ் சென்று ராமா "
சூர்ப்பனகியைப் பங்கம் செய்தீர் "

66. ஸந்யாஸி ராவணன் வந்து ஹரிஹரி
ஜானகியைச் சிறையெடுத்துப் போனார் "
ஜடாயுவுக்கு மோக்ஷங் கொடுத்தீர் "
சபரிக்கு முக்தியளித்தீர். "

67. சுக்ரீவன் தோழமையைக் கொண்டீர் "
துடுக்கான வாலியை முடித்தீர் "
அன்பான மாருதியுந் தேடி "
(கணை) யாழிதனைக் கைகொடுத்து வந்தார் "

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

68. சூடாமணியை கண்டு ராமா! "
ஸேதுவினிலணை கட்டிச் சென்றீர். "
தசமுகணைக் குலத்துடனே கொன்றீர் "
சீதையைச் சிறைமீட்டுக் கொண்டீர். "

69. அன்புடைய கௌசலையும் மகிழ "
அயோத்திக்கு அரசனாய் இருந்தீர். "
பலராம கிருஷ்ணராய்ப் பிறந்தீர் "
பார்த்தனுக்குச் சாரதியாய் அமர்வீர் "

70. பொல்லாத அசுரர்களை வதைப்பீர் "
பூதேவி பாரங்குறைப்பீர் "
பார்த்தனுக்குத் தத்துவம் உரைப்பீர் "
பாரதப் போரை முடிப்பீர். "

71. பௌத்தாவதாரத்தை எடுப்பீர் "
பிராணிகளுக் குபகாரஞ் செய்வீர் "
கலி தன்னைத் தொலைத்திடவே கிருஷ்ணா "
கருணையுடன் காட்சிதன்னை அளிப்பீர் "

72. ஆதி நாராயணா நமஸ்தே "
அஞ்ஞானம் நீக்குவாய் நமஸ்தே "
பக்தியுடன் அக்ரூரர் துதித்துப் "
பலராம கிருஷ்ணரையும் புகழ்ந்தார் "

73. மகிழ்ச்சியுடன் துதிக்கவே கிருஷ்ணா ஹரிஹரி
மதுரா நகரம் அடைந்தீர். "
வணங்காத வண்ணானை வதைத்தீர் "
வஸ்திரங்களை வழங்கி நின்றீர் "

74. மலர்மாலை அளித்திட்ட நம்பிக்கு "
வைகுண்ட பதவியைக் கொடுத்தீர் "
பரிமளச் சந்தனங்கள் பூசி "
பரிவுடன் கூனலையும் நிமிர்த்தி "

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

75. திருவக்கிரையை மனமகிழச் செய்தீர் "
சேணியன் ஆடையணி தந்தான். "
அண்ணருடன் வாங்கி யணிந்தீர் "
அன்புடனே பதவியளித்தீர் "

76. குவலயா பீடத்தைக் கண்டீர் "
கொன்று அதன் வீரங் குலைத்தீர் "
சாணூரன் முஷ்டிகனைத் தள்ளி "
தமையனுடன் கூடி ஜயித்தீர் "

77. கம்ஸனுடைய மஞ்சத்தில் குதித்தீர் "
கிரீடம் சிதறிவிழக் கொன்றீர் "
எட்டுப்பேர் தம்பியர்கள் கிட்ட "
இராமருடைய ஆயுதத்தால் மடித்தீர் "

78. அண்ணருடன் கூடிய கிருஷ்ணா "
அன்னை தந்தை அடிவணங்கி நின்றீர் "
தந்தைதாய் சிறைநீக்கிக் கிருஷ்ணா "
ஜயமடைந்த அவர்களுடனிருந்தீர் "

79. வசுதேவர் தேவகியும் மகிழ்ந்து "
மைந்தர்களைத் தழுவியணைத்தாள் "
தழுவியே முத்தமிட்டுத் தாயார் "
தன்னுடைய சோகந் தணிந்தாள் "

80. சேதையுடன் நந்தரையும் போற்றி ஹரிஹரி
சொந்தமுடன் கோகுலத்தில் சேர்ந்தே "
யநோதயுடை வாஞ்சையினால் கிருஷ்ணா "
இருவருக்கும் மைந்தரா யிருந்தீர் "

81. சொந்தமுள்ள மைந்தருக்குத் தந்தை "
சிறப்புடனே உபநயனஞ் செய்தார் "
மகிரிஷிகள் அந்தணர்கள் மகிழ "
வரிசையுடன் தானம் வழங்கி "

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

82. பசுக்களுடன் கன்றுகளைக் கிருஷ்ணா "
பிராமணர்கள் மகிழ் அளித்தார் "
போஜனங்கள் பண்ணியே அளித்தார் "
பந்து ஜனங்களுடன் வசித்தீர் "

83. உக்கிரசேன ராஜாவை அழைத்தே "
உரிமையும் ராஜ்ஜியமளித்தீர் "
சாந்தீப முனிவருடன் சென்றீர் "
சகலவித்தையும் கற்றுக்கொண்டீர் "

84. பஞ்சனனைக்கென்று கிருஷ்ணா "
பஞ்சஜன்ய சங்கமடைந்தீர் "
காலன் எமதர்மரிடஞ் சென்றீர் "
குரு சூதனை மீட்டுக் கொடுத்தீர் "

85. உத்தவரை உபசரித்து அனுப்பி "
குற்றமற்ற கோபியர்க்குச் சொன்னீர் "
கோபியர்கள் உத்தவரைக் கண்டார் "
கிருஷ்ணனைக் கொண்டாடியிருந்தார் "

86. சிசுபாலன் கருவம் அடக்கி "
ருக்மணியை அடைந்தீர் "
அஷ்டலக்ஷ்மியுடன் கிருஷ்ணா "
அழகான துவாரகையில் வசித்தீர் "

ஓம் தத் ஸத்.

மானஸீகக் காசி யாத்திரை

1. ஸத்குருவின் கிருபையினால் (காசி) யாத்திராமஹிமை
ஸங்கிரமமாய்ச் சொல்லுகிறனே சாதுக்கள் மகிழ

2. புத்தியினால் நிச்சயிக்கும் சிருஷ்டிகளெல்லாம்
போதமயமாயிருக்கும் பூரண வடிவமாய்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

3. தேசாந்தரங் கடந்து கோஷிக்குமாப்போல்
தசேந்திரியங்களையும் படிய அடக்கி

4. ஆதாரகங்கையென்று உற்சாகமாய்ச் செல்லும்
ஆனந்த ஸ்வரூபந்தன்னில் நிரஞ்சனமுமாய்

5. அஹங்கார முதலான அந்தக் கரணத்தின்
அகந்தை மமதை என்ற வைரியை விட்டு

6. காம குரோதப் பகைவரை கிட்ட வொட்டாமல்
விவேகமென்னும் சதவாசனையுடனேயிருந்து

7. ஸ்தூல சூக்ஷ்மமாயிருக்கும் ராஜ்ஜியம்விட்டு
ஏகாக்கிர சித்தை என்னும் வாகனமேறி

8. ஏகபோகமாயிருக்கும் கானிசதனிலிறங்கி
ஹிருதய சுத்தியாகவே தியானமும் செய்து

9. ஈசணாத்யரங்களென்னும் வாசனை போக்கி
இந்திரியங்கள் பதினாலு முள்ளே அடக்கி

10. இடைபிங்கலையென்ற இரண்டு நாடியை
யமுனை கங்கையாகப் பாவித்தென்னுள்ளே

11. சுசும்னா வென்றதொரு நாடியைத்தானே
சரஸ்வதியாமந்தர் வாகினியுங்கூடி

12. திருவேணி சங்கமத்தில் தீர்த்தங்களாடி
திரிதாபமற்றதொரு வெண்பட்டு உடுத்தி

13. நிஷ்களங்க மாயிருக்கும் ஜபதபம் செய்து
நித்யானந்த மாயிருக்கும் கோயில் புகுந்து

14. பக்தியுடன் மனம் மகிழ் விஸ்வநாதரைப்
பிரதினமும் தரிசித்து உள்ளேயிருந்தேன்

15. அறிவென்ற விசாலட்சி அம்மனுமப்போ
ஆகாமிய சஞ்சிதங்கள் இரண்டு மறுத்தாள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

16. தாரகப் பிரம்மமென்ற விஸ்வநாதரும்
சந்தோஷமாய்க் கங்கா ஸ்நானம்பண்ணுக என்றார்

17. அற்புதமாய் விஸ்வநாதர் கிருபையினாலே
ஆனந்த கங்கா ஸ்நானம் பண்ணியப் பிறகு

18. பக்தியுடன் பிரயாகையில் ஸ்நானங்கள் செய்து
பரிபூர்ணமான மணிகர்ணிகையாடி

19. கங்கையுடன் யமுனை ஸரஸ்வதி முதலாம்
கீர்த்தியுள்ள அறுபத்தநாலு தீர்த்தங்களாடி

20. சப்தஜன்மம் ஈடேற வடிவிருக்ஷத்தின் கீழே
நித்தியத் திருப்தியாக வெகுபிண்டமும் போட்டுத்

21. தத்துவங்கள் தொண்ணூத்தாறு கயாவாளுக்கும்
சந்தோஷமாக வெகு திருப்திகள் பண்ணி

22. நித்தியா நித்தியவஸ்து வென்னும் காவடி கட்டி
நிரந்தரப் பிரம்மமென்னும் கங்கையைத் தூக்கி

23. சத்சங்கமென்னும் சோபாதிகளோடே
சினரதணமன்னமென்னும் மார்க்கமுந் தாண்டி

24. ஜனன மரணமற்ற ராமேஸ்வரத்தில்
ஸ்திரபோகமாகவங்கே வந்தேயிருந்து

25. அக்கியானத்தினால் வந்த துக்கங்கள் தீர
ஆனந்த ஸாகரத்தில் ஸ்நானமும் பண்ணி

26. ஆதியந்தமற்றிருக்கும் இராமநாதருக்கு
அறிவென்னும் கங்கை கொண்டபிஷேகம் செய்து

27. ஜோதிமயமா யிருக்கும் இராமநாதரை
சித்தத்துக்குள்ளே வைத்துத் தரிசனம் பண்ணி

28. அகண்ட பரிபூரணமாய் அசஞ்சலமாய்
ஆனந்தப் பிரம்மந்தன்னில் ஐக்கியமானேன்

ஓம் ப்ரம்மார்ப்பணமஸ்து

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

மானஸீக ஸேது ஸ்நானம்

1. திருவாழிதனை வாங்கி சீதையம்மன் கைக்கொடுத்து ராமர்
மாருதியும் சேதிசொல்லி வந்தார்
திரளான சேனையுடன் சுக்ரீவ ராஜருடன்
தர்ப்ப சயனத்தில வந்தார். இந்தக்

2. கதைதஸாரந்தனை யுரைக்கக் கந்தனுக்கு முன்பிறந்த
கற்பகமே உற்றதுணைவா !
லோககுருவாயிருக்கும் ரகுநாதநந்தருடை
பாதபத்மத்தில் பணிந்து

3. ஆசை எனக்குண்டான காமகுரோத லோபமோக
அகங்காரக் காட்டைக் கடந்து
தேசப்பிரசித்தமுள்ள நவபாஷாணத்தில் வந்து
(இனிவரும்) ஜன்மத்தை ஒழித்திடுவோம் !

4. சேதுநாத சுவாமி பாதார விந்தத்தை
சேவைபண்ணி ஈடேறிப் போவோம்.
பஞ்சமா பாதகமும் வியாதியும் பீடையும்
பரிஹரிக்கும் ராமருடை ஸேதுமஹிமை

5. நெஞ்சுநிலை இல்லாமல் பஞ்சுபோலவே பறந்து
தேசகாலம் ஏன் போக்குகிறாய்?
நஞ்சுள்ள கண்டரை ராமநாதப்பிரபுவைக்
கணடவுடன் ஜன்ம மெல்லாம்

6. செஞ்சூளை போட்டெடுத்த பொன்கள் போலவே துலங்கும்
(பாபம்) சேராமல் ஒழிந்தோடிப்போம்.
அறிந்தறிந்தும் சம்சாரத் துறவிலே போய் விழுந்தால்
யார் எனக்குத் துணையாகிறார்?

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

7. வெறிபோல் சம்சாரத் துறவிலே போய்விழுந்து
வீணுக்கேன் உழன்று சாகிறாய்?
கரிபோன்ற கடாவிலேறி ஏமனும் வரக்காலமானால்
கண்டவுடன் விழிக்கப் போகிறாய்

8. தேசிகர் சொன்னபடி நடக்கவுந் தெரியவில்லை
தெரிந்திருந்தும் அறியவில்லையே
ஆனாலும் உன்னுடைய ஆங்காரப்பாழ் ஜீவன்
ஆனந்தமடைய வொட்டுமோ ?

9. ரஜ்ஜுவில் சர்ப்பம் போலக் கந்தர்வ நகரம் போல
சுக்தியில் வெள்ளி போல யிந்தப்
பொய் கூட்டை நம்பினால் கல்பகாலமானாலும்
போதம் தன்னையறிய வொட்டுமோ?

10. சச்சிதானந்தரைக் கோவிந்த மூர்த்தியை
ஸ்ரீ விஷ்ணுவை ராமநாதரை
சத்குருபாதத்தைத் துணையாகவே கொண்டு
தனுஷ்கோடி நீராடவா.

11. வேதாந்த சாஸ்திரத்தைக் காதினால் கேளாமல்
வீண் பொழுது ஏன் போக்குகிறாய்?
உயிரின்மேல் ஆசைவைத்துத் தேகத்திலே கங்கையுடன்
ஓடியோடி ஏன் மாய்கிறாய்?

12 (நற்) கதியுனக்கு வேணுமென்றால் கந்தமாதன
பர்வதத்தில் பரிவுடனே போயிருந்து
நெறியுடனே வேண்டினால் பருவதவர்த்தினியும்
நினைத்ததெல்லாம் கொடுப்பவளே!

13. கலியிலே முழுகாமல் ராமநாதப் பிரபுவந்து
நடத்தி வைப்பர் சம்சார ஓடத்தை
விஷயசுமும் பூஜிப்போமென்று வேண்டியேநீ திரிந்து
இந்த வீட்டுத் தீக்குள்ளே இருந்து

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

14. (நாளைக்) காட்டுத்தீ போலவே எமகிங்கரன் வரவை
கண்டவுடன் விழிக்கப் போகிறாய்.
முடுக்கி முடுக்கி சுவாஸம் இழுக்கிறதும் துடிக்கிறதும்
மூர்ச்சைப் போடப் போகின்றதும்

15. காலஎமன் இழுக்கின்றதும்தூதர்
முன்னே விழிக்கின்றதும்
தேகத்தின்மேல் ஆசைவிடுத்து
தாகமெடுத்தலையும் போதும்
தலைபுரட்டல் கொள்ளும் போதும்
தர்மந்தனைக் கேட்கப் போகிறாயோ ?

16. வாதுகளும் பேசாத தத்துவார்த்த நிலை தன்னில்
(உந்தன்) சிந்தை தன்னை நிறுத்து மனதே.
மிருத்யுவுக்குப் பிடரியிலே வீட்டைக் கொடுத்து
விஷ்ணுமாய் க்காட்டிலிறங்கி

17. படுத்த பாம்புபோல அசைந்து போய் இருக்கிறாயே
சம்சார சாகரத்திலே
உன்னை எடுத்துவிட்டுக் கரையேற்றிப் போகவழி
இதமாய் இருக்க வொட்டுமோ ? (காட்டினாலும்)

18. பார்த்தவுடன் சேதுவைப் போக்கிவைக்கும் எமயபயத்தை
பக்தியுடன் நீராடி வா.
பஞ்சாக்னி மத்தியிலே தபசுகள் பண்ணவேண்டும்
மரவுரியைத் தரிக்க வேண்டாம்

19. காய் கிழங்கு பக்ஷித்து உலர்ந்து போகவேண்டாம்
காடுதனில் வசிக்க வேண்டாம்
ஆச்சரியமான ராமேஸ்வரத்தைத் தரிசிக்கமால்
யாருக்காக உழன்று சாகிறாய்?

20. அற்ற கொம்பின் பழம்போல மனமறியச் சொன்னாலும்
அஞ்சி அஞ்சி ஏன் திரிகிறாய்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

சுத்தமண்டலம்போல மனது தெளிவாகி நீ
ஸேது ஸ்நானம் பண்ணி வருவாய்.

21. அன்பான தசரதனார் அறிமுறைவோர் வயிற்றினிலே
ஸ்ரீ ராமவதாரமாகி (அவர்)
பொன்னான கையினால் சேதுவில் ஸ்தாபித்து
பூஜை செய்த ராமலிங்கத்தை

22. அண்டர்கள் நாயகரின் ஆதிபரமேஸ்வரின்
அடிமையாகி நீயும் மனதே
துக்கமெல்லாம் போக்கி ஜன்மமெல்லாம் ஒழிக்க
சேதுஸ்நானம் பண்ணி வருவாய் !

ஓம் ப்ரம்மார்ப்பணமஸ்து

ஸ்ரீ ராமர் இராமேஸ்வரத்தில் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்தல்

1. பவநிறத்தழகா பச்சை உமையாள் மகனே!
கடலையுடன் தேங்காயும் காராமணிப்பயறும்
அப்பமுடன் எள்ளுருண்டை அதிரசமும் மோதகமும்
தப்பாமல் நான் படைப்பேன் சக்திக்கணபதிக்கு

2. விக்கினங்கள் இல்லாத விநாயகரே முன்வருவீர்
வேலவரே கூட நின்று வேண்டும் வரமருள்வீர்
திருமாலும் லக்ஷ்மியும் மஹாதேவர் ஈஸ்வரியும்
வாணி ஸரஸ்வதியும் வரமளித்துக் காத்தருள்வீர்

3. அசுரர்குலம் வேரறுத்த ஆதிரகு குலராமர்
கடலில் அணைகட்டிக் கமலவல்லி ஜானகியை
தசமுகனை ஸம்ஹரித்துச் சிறைமீட்டு வந்தபின்பு
சுற்றும்நம்மைப் பிரம்மஹத்தி தோஷமென்று ராமர்கண்டார்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

4. திருவணைக்குப் பக்கத்தே ஸேதுக்கரைதனிலே
பாணலிங்கம் வைத்துப் பிரதிஷ்ட்டை
பண்ணிப் பூஜை செய்தால்
ஒருபாவம் அண்டாது பாவங்கள் நீங்கிவிடும்
என்றுமந்த ராமர்சொல்லி ஏற்றமுள்ள இஷ்டருடன்

5. சுயஜோதியானலிங்கம் சிவனிடத்தில் வாங்கியிங்கே
அதிதுரிதமாய் வருவீர் ஹனுமானே என்றுரைத்து
சுபமான இத்தினத்தில் சிவப்பிரதிஷ்ட்டை செய்திடுவோம்
இப்பொழுதில் வாருமென்று இராகவருந் தானனுப்பி

6. சங்கல்பஞ் செய்துகொண்டு ஸ்ரீராகவரும்சீதையுடன்
சேதுமஹத்துவத்தைச் சகலருக்குந் தானுரைத்து
தம்முடைய இஷ்டருடன் ஸ்நானங்களாடி விட்டு
ஜபம்தர்ப்பணம் முடித்துத் தானங்கள் தான் கொடுத்தார்.

7. கோதானம் பூதானம் ஸ்வர்ணதானங் கொடுத்தார்
கொம்பனையாள் சீதையுந்
தன்னுடனிருந்த ஸ்த்ரீகளுடன்
சாகாரத்தின் வெண்மணலைச் சிவலிங்கமாய்ப்பிடித்துப்
பொற்கொடியாள் சீதையைப்போல்
பக்தியுடன் பூஜை செய்தார்.

8. இராகவரும் தம்பியுடன் இலங்கை விபீஷணரும்
சுக்ரீவராஜருடன் சேனைகளுஞ் சூழ்ந்திருந்தார்
அந்தணர்கள் மகிரிஷிகள்
அனைவர்களும் சேர்ந்திருந்தார்
அன்பர்களைப் பார்த்து அபிராமர் சொல்லி விடுவார்.

9. அம்ருதயோகந்தனிலே அரனைப்பிரதிஷ்ட்டைபண்ண
வாய்த்த நல்ல முகூர்த்தமிது மாருதியைக் காணவில்லை
சிற்றிடையாள் சீதையுடை செங்கமலக் கையதனால்
மணலால் பிடித்த லிங்கம் பூஜை பண்ணி வைத்திருந்தாள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

10. அந்த மஹாலிங்கத்தை அர்ச்சனைகள் செய்திடுவோம்
என்று ரகுராமர் சொல்ல எல்லோரும் தானிசைந்தார்
பாற்கடல் நாதர் பிரதிஷ்ட்டை செய்தார் பாருலகில்
ராமலிங்கமென்று ராகவருந்தான் துதித்தார்.

11. கீர்த்தியுள்ள கங்கைநதி கிட்ட வரவேணுமென்று
தீர்க்குமுடன் வில்லெடுத்து ஸேதுவினில் ஊன்றி வைத்தார்
சுத்திலுமே கங்கையம்மன் குதித்து வந்தாள் நிர்மலமாய்
சித்திரமாய்ப் பொன்குடத்தில் ஸ்ரீராமர் தானெடுத்து

12. பச்சை வில்வம் துளஸி பரிமளவாசனை சேர்த்துக்
கலச பூஜை சங்கு பூஜை காகுஸ்த்தராமர் செய்தார்.
ஜய ஜயவென்று சொல்லித் தேவர்கள் வாத்தியம் முழங்க
சிவருத்திரந்தன்னை அந்தணர்கள் தான் ஜபிக்க

13. பொற்கமலநாதர் புருஷோத்தமரும் பக்தியுடன்
முக்கண்ணர் சங்கரருக்கு மூவுலகுங் கொண்டாட
அச்சுதாராம் ஸ்ரீராமர் அபிஷேகம் பண்ணிவைத்தார்
பச்சைமுகில் மேனியரும் பட்டாடை சாத்தி விட்டார்.

14. சந்தனங் குங்குமம் சங்கரருக்கும் பார்வதிக்கும்
மங்களமாகவரும் வாசனையாய்ப் பூசிவிட்டார்
பரிமளப் புஷ்ப்பங்களினால்மாலைகளும் போட்டுவிட்டார்
பச்சைவில்வம் துளஸி பரிமள புஷ்ப்பங்களால்

15. இராமலிங்க மூர்த்தியென்று சிவநாமங்களையுரைத்து
செங்கமலக்கையதனால் ஸ்ரீராமர் அர்ச்சித்தார்
மூவர்க்கும் மேலான மூர்த்தி சிவாய நம
முனிவர் தேடி யறியாத முதல்வர் சிவாய நம

16. மானும் மழுவுந் தருத்தீர் சிவாய நம
மறலியைக் காலால் உதைத்தீர் சிவாய நம

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

சூலபானுச் சுடரொளியே சிவாய நம
ஜோதிமயமான பரம்பொருளே சிவாய நம

17. பால்போன்ற மேனிப் பரனே சிவாய நம
பஞ்சாக்ஷரத்தின் பொருளே சிவாய நம
காளியை வாதுக்கழைத்தீர் சிவாய நம
கனகசபையில் நடித்தீர் சிவாய நம

18. திரிபுரந்தன்னை எரித்தீர் சிவாய நம
சேதுநகர் ஸ்ரீராமநாதர் சிவாய நம
கங்கை ஸ்ரீகண்டா சிவாய நம
கலையை முடிவில் அணிந்தாய் சிவாய நம

19. தூபமுடன் தீபமிட்டார் ஸ்ரீராமர் சங்கரருக்கு.
நிர்மலமூர்த்திக்கு நைவேத்தியம் பண்ணி வைத்தார்
அர்க்யங் கொடுத்து ஹாரத்திக் காப்பெடுத்தார்
புனர்ப்பூஜை பண்ணியவர் பஞ்சாக்ஷரஞ் ஜபித்தார்.

20. பொன்னுலக தேவர்களும் புஷ்ப்பவருஷஞ் சொரிந்தார்
ரம்பையுடன் ஊர்வசியும் நர்த்தனங்கள் பண்ணி நிற்க
சுந்தரமாங் கந்தர்வாள் சங்கீர்த்தனம் பாட
வந்திருந்த மகரிஷிகள் வேதங்கள் துதிக்க

21. பிரக்ஷிணகள் பண்ணிப் பரமருடைய தாள்பணிந்து
கௌஸல்யாரமர் அப்போ கைகூப்பித் தான் துதித்தார் !
திருமுடியும் செஞ்சடையும் திகழ் காதுக் குண்டலமும்
கதிரொளிபோல் திருமுகமும் கனிபவளச் செவ்வாயும்

22. கிருபைமொழியுங் கண்மலரும் குமிழ் போன்ற திருமூக்கும்
திருவுருவை எந்நாளும் சிந்தைவிட்டு நான் மறவேன்
பற்றிவரும் தீவினையும் பஞ்சமஹா பாதகமும்
சுற்றிவரும் தோஷமெல்லாம் தீர்ப்பாய் தயாபரனே !

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V. Hariharan Collection, Sholinganallur, Chennai

23. சேதுவினில் நீராடி ஸ்ரீராமலிங்கத்தைப் பணிந்த
ஜீவர்களின் பாபமெல்லாம் போக்கமையா சங்கரரே!
பக்தியுடன் வேண்டியந்தப் புண்ணியராம் ராகவரும்
ஸ்தோத்திரம் செய்த திருவடியிலே பணிந்தார்.

24. பக்ஷியமும் போஜனமும் பரமருடைபிரஸாதமெல்லாம்
அந்தணர்கள் தம்முடனே இஷ்டருக்கெல்லா மளித்தார்
தாம்பூரம் தட்சணைகள் சகலருக்குந்தான் வழங்கி
சற்குணராமர் சபைதனிலே வீற்றிருந்தார்.

25. மகாலிங்கம் கொண்டுவந்தார் வாயுகுமாரர் அப்போது
அபிராமர் பாதமலர் ஹனுமான் பணிந்து நின்று
தேவர் பிரதிஷ்ட்டை செய்து பூஜித்ததையறிந்து
சிந்தைமிக வருந்தி ஹனுமான் பணிந்து நின்று

26. சொன்ன சொல்லைத் தவறாத ஸ்ரீ ராமர்! நீருமிப்போ
என்னை யனுப்பிவிட்டு ஈஸ்வரபூஜை செய்தீர்.
சிவலிங்கங் கொண்டு வந்தேன் சொல்லும் தவறாமல்
துரிதமாய் ஓடிவந்தும் சிறுமைதன்னை நானடைந்தேன்.

27. என்னுடைய ஜன்மமும் வாழ்க்கையும் வீணாச்சே
என்னை எங்கள் அஞ்சனையாள் பெற்றெடுத்து ஆளாக்கி
சுக்கிரீவ ராஜனுக்கு (சிறந்த) அமைச்சனாய்
நானிருந்தும்
சுந்தரராமா ! உனக்குத் தோழனாய் நானமைந்து

28. இந்தக்கடல்தனை நான் இமைப்பொழுதிலே தாண்டி
ஜானகியைத் தேடியெங்கும் கண்டது ஜயமடைந்து
வனங்களெல்லாம் தானழித்து ராக்ஷஸர்களை வதைத்து
வாலில் இட்ட தீயதனால் வனங்களையுஞ் சுட்டெரித்து

29. திரும்பிவந்து உம்மிடத்தில் சூடாமணியளித்துத்
தொண்டனாய் நானிருந்து சுமந்துகொண்டு வாகனமாய்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Bandi Sri Aharibaran Collection, Sholinganallur, Chennai

சண்டை அமர்க்களத்தில் தாசனாய் நானலைந்து
சேனைகளுந்தான் பிழைக்கச் சஞ்சீவி கொண்டு

30. காகுஸ்த்த ராமா! உங்கள் கட்டளை தப்பாமல்
சுயஞ்சோ தியானதொரு சிவலிங்கம் கொண்டு வந்தேன்
இந்த அவமானம் செய்தீரே நீருமென்ன
மறவேன்நானென்று சொல்லி மாருதியுந்தான் வருந்த

31. அபிராமர் கண்டிரங்கி ஹனுமாரைக் கிட்டழைத்துக்
கௌஸல்யா ராமர் அவரைக் கையாலெடுத் தணைத்து
அமுதமலர்க் கண்ணீரை அங்கையினாலே துடைத்து
ஹனுமான் துயர்நீங்க அபிராமர் சொல்லி விடுவார்.

32. என்னதென்றும் உன்னதென்றும் பேதமில்லை எந்தனுக்கு
அத்வைதமானவரே ஆத்மாவே லிங்கமன்றோ!
நல்லதொருகாலமென்று நானுமிங்கே பூஜை செய்து
வித்யாசம் எண்ணாதீர் மாருதியே நீருமிப்போ

33. என்னுடைய லிங்கம் உன்னால எடுத்தெறியப்போ மானால்
வந்து பிடுங்கி எறிந்துவிடுமென்று சொன்னார்.
சொன்னவுடன் மாருதியும் துடுக்காய் எழுந்திருந்து
கோபத்துடன் உருமிக் குரங்கின் குணங்காட்டி

34. ஆவென்று வாய்திறந்து அகங்காரத்தாலெழும்பி
காமனைக் கண்ணாலெரித்த காலகாலென்றெண்ணாதே
வாலாலே சுற்றி மஹாதேவர் மேனிதன்னை
ஆகாசத்தில் கிளம்பி அப்புறத்திலே விழுந்தார்.

35. நாசியுடனே முகமும் நவத் துவாரமும் திறந்து
இரத்தம் பெருகிவர சுவாசமற்று தான் கிடந்தார்.
கண்டவுடன் எல்லோரும் கடலோசை போலிரைந்து
ஐயோ ஹனுமானுக்கு ஹானிவந்ததென் றழுதார்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

36. செங்கமலக் கண்சிவக்கச் சீதைமிகத் தானழுது
அவளங்கு கமலக் கையாலே ஹனுமானைத்தான் துடைத்து
மாருதியே என்னுயிரை வாஞ்சையுடன் காத்தவரே
அவங்களமாய் அவமிருத்யு வருமோ ஹனுமானே.

37. என்று சொல்லித் தான் வருந்தி மாருதியைத் தானெறிந்து
செங்கமலநாதருடை திருவடியின் கீழ்போட்டாள்.
ஹனுமான் முகந்துடைத்து அபிராமர் தான்புலம்பி
அஞ்சனையால் பெற்றெடுத்த அறிவுடைய புத்திரனே.

38. சிரஞ்சீவி நீயுமன்றோ என்னுடைய தெய்வமன்றோ
ஜானகியை நான்பிரிந்து தவிக்குமந்த வேளையினில்
அஞ்சாதீர் என்று சொல்லி
அவனியெங்குஞ் சென்றலைந்து
அலைகடலைத் தாண்டி அணி இலங்கைதான் புகுந்து

39. சீதையரைக்கண்டு திருவாழி தானளித்து
வந்தெதிர்த்த ராக்ஷஸரை மடியவே ஸம்ஹரித்து
இலங்காபுரி நகரைத் தீயால் எரித்துவிடடுத்
திரும்பிவந்து என்னுயிரைத் தீர்த்துவிட்ட சுந்தரனே !

40. கமலதளம் போன்றிருக்கும் கண்களிலே நீர்பெருகத்
தலைமுதல் கால்வரைக்கம் தாமரைக் கையால் துடைத்தார்.
காகுத்ஸ்த ராகவனார் கருணையுடன் தொட்டவுடன்
கண்ணில் நீர்பட்டவுடன் களைதெளித்து மாருதியும்

41. அன்புடைய ராமருடை ஆசீர்வாதங்களினால்
மூர்ச்சை தெளித்து எழுந்து நின்றார் மாருதியும்
அன்புடைய ராமா! என் அபசாரம் தான் பொறுத்து
அடியேன் கொணர்ந்த லிங்கம் ஆராதனைகள் செய்ய

42. அனுமதியுந் தாருமென்று ஆஞ்ஜநேயர் கேட்கலுமே
அச்சுத ராமரப்போ அதிக சந்தோஷமுடன்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஹனுமான் கொணர்ந்த லிங்கம் அருகில்
பிரதிஷ்ட்டை பண்ணி
ஆராதனைகள் செய்து அன்புடனே பூஜைபண்ணிச்

43. சாலியன்னம் சித்ரான்னம் நைவேதனங்கள் செய்து
சபையினுள்ளோர் தங்களுடன் திருப்தியுடனே
மாருதியுங்கொண்டு வந்த மூலமுதல் லிங்கமதை
முந்தி வந்து கண்டவர்கள் மோஷபத மடைவார்கள்

44. என்று சொல்லி வாழ்த்தியவர் இராமேஸ்வரத்தில்
இன்பமுள்ள புஷ்ப்பக விமானத்தில் ஏறியவான்.
வைகுண்டவாழ்பதியும் அயோத்தியாபுரத்தில் வந்து
மாதா மன மகிழ் மணிமகுடஞ் சூட்டி நின்றார்.

45. சீதா சமேதராய் சிம்ஹாஸனத்தில் வீற்றிருந்தார்.
தேவருஷிகள் துதிக்கத் தம்பிமார்கள் கூடிநிற்க
வசிஷ்டமஹாமுனிவர் மணிமகுடஞ் சூட்டி நிற்கக்
கௌசல்யராமர் காட்சியுடன் சேவை தந்தார்.

ஓம் தத் ஸத் ப்ரம்மார்ப்பணம் அஸ்து.

ஸ்ரீ கிருஷ்ண பகவான் பாண்டவர்களுக்கு உபதேசித்த மானஸீக பூஜை

விநாயகர் வணக்கம்

1. தும்பிமுகத்தவரே தொப்பைக் கணபதி
முன்கை முகத்தவரே மூஷிகவாகனரே

2. மோதகத்தைக் கையில் தரித்த கணபதியே முன்னடவும்

3. அப்பமும் பொரி அவலும் சர்க்கரையும் எள்ளுருண்டை
பக்குவமான பாலாப் பழமும் தேங்காயும்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

4. செவ்விள நீரும் தேன்பாகும் சர்க்கரையும்
முப்பழங்கள் தன்னுடனே விநாயகரே நான் படைப்பேன்
சற்குணனார் பூஜைதன்னைச் சற்றே தெரிந்துரைக்க
வாணி சரஸ்வதியும் விநாயகரும் முன் வருவீர் !
(பாண்டவர்கள் வரலாறு)

6. பாண்டவர்களனைவரும் பாஞ்சாலி தன்னுடனே
(அவர்கள்) தேகம்பறி கொடுத்துத் திரவிய மெல்லாமிழந்து

7. கானகத்தில் நடந்து சாமிவனத்தில் வந்து
அநேக முனீஸ்வராளும் அந்தணரும் சூழ்ந்திருக்க

8. அதிசோகத்துடனிருந்தார் பாண்டவர்களனைவரும்
கிலேசமெல்லாம் போக்கவென்று கோபால
கிருஷ்ணன் வந்தார் !

9. வந்த கிருஷ்ண சுவாமிக்கு மலராஸனம் போட்டு
அவரண்டையில் தர்மர் அதிசோகத்துடனிருந்து

10. அச்சுதரே கேளுமையா ! இந்த அகில ஜனங்களுக்குள்
எங்களைப்போல் ஜன்மம் ஒருவரையுங் கண்டதில்லை

11. (நாங்கள்) ஜன்மமெடுத்த துன்பம் ஸ்ரீ கிருஷ்ணா போதுமையா
எங்களுக்கு நல்லவழி ரிஷீகேசா சொல்லு மென்றார்.

12. தர்மபுத்திரர் கேட்கலுயேம சக்கரத்தார் தான் சிரித்து
உங்களுக்கு நல்லவழி உபாயமொன்று சொல்லுகிறேன்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸ்ரீ கிருஷ்ணபகவான் பாண்டவர்களுக்கு உபதேசித்தல்

13. சந்தமும் சிந்தையினில் சிவசங்கரரைக் கண்டு கொண்டு
மங்களமாகவே தன் மானசீக பூஜைசெய்து

14. சாம்பபரமேஸ்வரரைச் சரணமென்று நீரடைந்தால்
பூலோகம் கைவசமாய்ப் புவனமெங்கு மாண்டிடுவீர் !

15. காலாந்தரந்தனிலே கைலாசம் சேர்ந்திடுவீர்
பூஜை பண்ணுமென்று சொன்னார் புண்ய புருஷோத்தமரும்

16. கோவிந்தர் சொற்படிக்கு கிலேசமெல்லாம் விட்டுதறி
மாதவனார் சொற்படிக்கு மஹாதேவ சங்கரரை

17. மானசீகமாக மனத்தில் நிலைநிறுத்திப்
பூஜை பண்ணிக்கொண்டிருந்தார் பாண்டவர்களனைவரும்

18. வாரீர் நீர் பாண்டவர்கள் சிவமஹிமை
ஆதிசிவன் மஹிமை யாரும் அறியார்கள்.

19. யாராலும் அவர் மஹிமை பூரணமாய் அறியமுடியாது
ஆகாச வாணியுமாய் அகிலாண்ட மூர்த்தியுமாய்ப்

20. பூமிக்குத் தேவதையாய் பூரண சொரூபமாய்
பிரம்மனுமாய் விஷ்ணுவுமாய் ஸர்வ பூதகாரணமாய்

21. தேவரிஷிகளுமாய் விண்ணவராய் இந்திரனுமாய்
அந்தராத்மாவாய் அதிஷ்டடான தேவதையாய்

ஆவாஹனஞ் செய்தல்

22. சச்சிதானந்தரான சற்குணனார் சீர்வடிவை
ஸ்ரீகிருஷ்ணர்உரைத்திடவே கீர்த்தியுள்ள பாண்டவரில்

23. பீமன் நன்றாயறிந்து விளங்கினார் ஆத்மாவாய்
அகஸ்த்யனாரும்அறிவார் சிவன் மகிமை

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

24. இன்னுமறிந்தவர்கள் சனகாதி யோகியர்கள்
ஆதிபிரகாசத்தை அகண்ட வெளியானவரை

25. ஆத்மாவை ஜீவன் அறிந்தவிதம் சொல்லுகிறேன்
தேகமே அலமாய் ஜீவனே ஈஸ்வரானாய்

26. அகத்திலிருக்கும் அலர்ந்த செந்தாமரையில்
புத்தியினாலறிந்து பிரம்மந்தனையுடைய

27. ஐந்து பூதத்தால் அலையும் மனவாயுவைக்
கண்டத்திலே நிறுத்திக் கண்ணாடிபோல் விளக்கி

28. அண்டமென்னும் பிண்டமதில் அகிலமெல்லாங் கொண்டேன்
பதினாலு உலகமுடன் பலநதியும் சாகரமும்

29. தேவலயமும் சிவனிருக்கும் மண்டபமும்
தன்இருதயந்தன்னிலே சகலமுமாய்ப் பாவித்தேன்.

30. கல்வர்ஷம் பெய்து கனவெள்ளமாய் ஓடி
ஆறும் அருவிகளும் வாய்க்காலும் ஓடைகளும்

31. கங்காநதியுடனே சமுத்திரத்தில் போய்விழுந்தால்
(அந்த) தண்ணீரை வெவ்வேறாய்ப் பிரித்திடவுமாகாது

32. (அதுபோல) ஜீவன் முக்தியடைந்தால் திரும்பியும்
ஜன்மமிருக்காது
சூரியன் உதித்து ஜனங்கள் வெளியானற்போல்

33. இருளான மாய்கை தள்ளி இருதயவெளிகண்டு கொண்டு
திடமாகப் பக்தி பண்ணிச் சிவன்மேல் கருத்து முண்டாகில்

34. அதுவே பழக்கமதாய் அனுபோகம் உண்டாகில்
இதுவே சிவதியானத்திற் கேதுவென்றார் மாதவரும்

35. அலையும் மனவாயுவை ஆறாதாரம் நிறுத்தி
ஆறாதார மூலத்தில் அம்பிகையைக் கண்டு கொண்டு

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

36. அனலால் விளக்கி அமிர்தமழையில் மூழ்கி
அனாஹத மூலத்தில் அம்பிகையைக் கண்டு கொண்டு

37. (அந்தக்) தேவாதிதேவன் சிவனை உமையுடனே
அன்பென்னும் பொற்றளத்தின் மேலேயழகுபெறச்

38. செம்பென்னும் இரத்தினமும் இழைத்த சிங்காதனத்தில்
இருதய சிங்காதனத்தில் ஈஸ்வரனைக்கண்டுகொண்டேன்

39. மணிப்பிரகாசம்போல் மாலை விளக்கேற்றி வைத்தேன்
மல்லிகை பூத்தார்போல் வரிசை விளக்கேற்றி வைத்தேன்

40. ஐம்பூதக் கன்னியால்ஆரத்தியும் எடுத்தேன்
கண்டமணி அடித்தேன் கைலாசநாதருக்கு!

41. சிந்தையின் உள்ளே சிவபூஜை செய்திருந்தேன்
அகஸ்தியர் வேதமுனி அருந்தவசி மாதவர்கள்

42. சப்தரிஷிகள் கலச பூஜைகள் பண்ணிநிற்க.
தேவரிஷிகள் சிவருத்ரங்கள் தான் ஜபிக்க

43. கற்பகவிருக்ஷம் கனகவர்ஷம் சொரிய
அற்புதமாய்க் காமதேனுஆவின்பாலைக் சொரிய

அபிஷேகஞ் செய்தல்

44. பொற்குடத்தில் பாலம்ருதம் போதமுடன் ஏந்திவந்து
அம்பிகைக்கும் சங்கரர்க்கும் அபிஷேகம் பண்ணி
வைத்தேன்.

45. சொர்ண கலசத்தால் சுத்தோதகமுஞ் சொரிந்தேன்.
கொம்பிலுள்ள தேனும் கோது இல்லாச் சர்க்கரையும்

46. காராம்பசு நெய்யும் கதலிப்பழத்துடனே
சேர்த்துப் கலந்து சிவன்முடிமேலே சொரிந்தேன்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

47. கிச்சிலி நார்த்தையுடன் எலுமிசசையின் ரஸமும்
சேர்த்துப் பிழிந்து சொர்ண கின்மதிலே எடுத்து

48. சுந்தரமூர்த்தி சிரசிலேதான் சொரிந்தேன்.
எண்ணெயுடன் நெய்யும் ஈசருக்கு நான் சொரிந்தேன்.

49. நெல்லியுடன் சிகைக்காயும் நிறையவே சார்த்தினேன்
மஞ்சளுடன் வாசனையும் மாக்காப்புச்சார்த்தினேன்.

50. பன்னீரும் சந்தனமும் பக்தியுடன் சார்த்தினேன்
நைவேத்தியம் பண்ணினேன் நிர்மலமூர்த்திக்குக்

51. கற்பூர ஹாரத்தி எடுத்தேன் கைலாஸநாதருக்கு
ஏழு சமுத்திரத்தை இருதயத்திலே அழைத்து

52. சப்த சமுத்திரத்தை தன்மனத்தினால் கொணர்ந்து
அறுபத்தாறுகோடி அற்புதமாந் தீர்த்தமெல்லாம்

53. மானஸிகத்தாலழைத்தேன் மஹாநதி தீர்த்த மெல்லாம்
ருத்ராபிஷேகம் ஈசருக்குப் பண்ணிவைத்தேன்.

54. கும்பாபிஷேகம் கௌரீ நாதருக்கு பண்ணி வைத்தேன்
பூர்ணாபிஷேகம் பக்தியுடன் பண்ணிவைத்தேன்.

55. சங்காபிஷேகம் பரமேஸ்வரர்க்குப் பண்ணி வைத்தேன்
சுத்த கங்கா தீர்த்தத்தில் திரும்பவும் பண்ணிவைத்தேன்

56. துளிர்போன்ற பட்டதனால்துவட்டியவர் மேனிதன்னை
மாணிக்கப்பூஷணமும் மார்புதனில் சந்தனமும்

ஆபரணஞ் சார்த்தல்

57. தேவரிடை மருங்கில் செம்பொன் பீதாம்பரமும்
அங்கியுடன் தொங்கும் அசையும் முப்புரிநூலும்

58. யஜ்ஞோபவீதமும் உத்தரீயம் சால்வைகளும்
பட்டையரை ஞானுடனே ஒட்டியாணக் கட்டழகும்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

59. கட்டியலங்கரித்தேன் கடிசூத்திரத்துடனே
தண்டையுடன் வண்டையமும் தாளடியிலே சிலம்பும்

60. ஐந்து விரலாழிகளும் அஸ்தகடகத் தொளியும்
முன்கை முதாரிகளும் மாணிக்கத் தோள்வளையும்

61. கொத்துசரப்புளியும் கண்டசர மாலைகளும்
முத்துடனே சொர்ண புஷ்ப்ப மோஹா மாலைகளும்

62. தாளிப்பதக்கமும் சங்கையற்ற பூஷணமும்
மார்புக்கிசைந்த மணிமுத்து மாலைகளும்

63. ருத்திராக்ஷி மாலைகளும் ஈசருக்கும் பார்வதிக்கும்
நவரத்தினத்தா லிழைத்த பதக்கத்திலாயிரமும்

64. புஷ்ப்பராகம்பதித்த பூஷணத்திலே கோடியும்
முக்கண்ணருக்கும் தேவியர்க்கும் மார்பிலிடமன்றிலே

65. ரத்தினமணியாபரணம் நிறைத்து அலங்கரித்தேன்.
வஜ்ஜிரமணி குண்டலத்தை மஹாதேவர் தோள் புஜத்தில்

66. தொட்டுச் செவியில் அசையச் சார்த்தினேன் பக்தியுடன்
ஒன்பது ரத்தினத்தால் ஒளிபெற்றே தானமைத்த

67. செம்பொன் மணிக்கிரீடம் சங்கரருக்கும் பார்வதிக்கும்
மங்களமாய்ப் பூ முடிமேல் வைத்து அலங்கரித்தேன்.

68. மணியிழைத்த பாதுகையும் மலரடியில் சார்த்திவிட்டேன்
அர்ச்சிக்கச் சொர்ணபுஷ்பம் அன்புடனே கொண்டு வந்தேன்.

புஷ்பம் அலங்கரித்தல்

69. இலக்கமற்ற புஷ்பவகை நீலகண்ட சங்கரருக்குக்
கொத்தறுகு மந்தாரை குடமல்லிகையும்

70. பச்சைத் துளசியும் பாரிஜாதப் புஷ்ப்பங்களும்
மட்டற்ற வேர்க்கொழுந்தும் மணமுள்ள மல்லிகையும்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

71. (வில்வ) பத்திரத்திலேகோடி பருவதம்போற் குவித்தேன்.
மலர்ந்த புஷ்பத்தினால் அனந்தம் மாலைகளுந்தொடுத்துச்

72. சங்கரருக்கும் பார்வதிக்கும் சாற்றி அலங்கரித்தேன்
அற்புதப் புஷ்பவகை அரவிந்தமும் சண்பகமும்

73. கொன்றை குருக்கத்திக் கொத்தரளி மந்தாரை
முல்லை இருவாஷி மணமுள்ள சம்பங்கி

74. இடைக்கிடையே தொடுத்து ஈசருக்குச் சாற்றினேன்.
ஸப்தருஷிகள் சகஸ்ரநாமம் உச்சரிக்க

75. அலர்ந்த செந்தாமரையில் ஆயிரம் பூ அர்ச்சித்தேன்
ஆதி மூர்த்தியுகர்ந்தார் அலங்காரப் பூஜைதன்னை

நைவேத்யம் செய்தல்

76. தேவருகந்து திருமணையில் வீற்றிருந்தார்.
ராஜான்னம் சம்பான்னம் இஷ்டமுடனே கொணர்ந்தேன்.

77. பருப்பும் பொரிக்கறியும் பத்துவகைப்பச்சடியும்
காராவின் நெய்யும் கரும்புரசம் தேனுடனே

78. திரட்டுப்பால் தேன்குழலும் செவ்விளநீர் கொண்டு வந்தேன்.
சர்க்கரைப் பொங்கலுடன் சித்ரான்னம் பலவிதமாய்

79. ஆமவடை போளியும் அப்பளமும் பாயஸமும்
கதலிப்பழமும் கண்குழிந்த மாம்பழமும்

80. சுளையுடனே நிறைந்த தித்திக்கும்பலாப்பழமும்
மதுரவிளாம் பழமும் மணப்பாகும் தேன்பாகும்

81. மதுரமுள்ள செந்தேனும் வகை வகையாய்ப் பாயஸமும்
சுத்தகங்காதீர்த்தமும் (சொர்ண) கெண்டியிலே
கொண்டு வந்தேன்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

CC-0. Pandit Sri V.V.Hariharan Collection, Sholinganallur, Chennai

82. திருத்திய செங்கரும்பும் செவ்விளநீர்க் குலையும்
உடைத்த தேங்காய்கோடி உடையாத தயிர் நூறுபடி

83. குடத்துநெய் மேற்சொரிந்து கொம்புத்தேன் கூட வைத்துப்
பரத்தித் தளிகைதன்னைப் பட்டினால் மூடி வந்தேன்.

84. சாம்பிரணி தூபதீபம் (சிவ) சங்கர பார்வதிக்கு
வாசனையாய் எடுத்தேன் வணக்கமொடுக்கமுடன்

85. கண்டாமணியடித்தேன் கைலாசநாதருக்கு
சுத்தோதகத்தாலே சுற்றினேன் நைவேத்தியமதை

86. சுத்த கங்காஜலத்தாலே சுற்றிப்ரதட்சிணமாய்
'அம்ருதோ பஸ்தரணமஸி' என்று ஆபோஜனம் போட்டேன்

87. பக்தியுடன் 'பிராணயஸ்வாஹா' பண்ணி
வைத்தேன் ஆறுமுறை
பூரணருங் கௌரியுடன் புசித்து திருப்தியான பின்பு

88. பன்னீரால் வாயலம்பிப் பட்டாலேதான் துடைத்துப்
பூஜித்தடி வணங்கிப் பொன்னாஸனத்தி லமர்த்தி

89. சொர்ணமணித் தட்டடதனில் சீவலுடன் வெற்றிலையும்
சாதிக்காய் ஏலமுடன் லவங்கம் ஜாதிப்பத்திரியும்

90. நீறுடனே வால்மிளகும் பச்சைக்கற்பூரம் குங்குமப்பூ
தாம்பூலம் கொடுத்தேன் சர்வஜ்ஞமூர்த்திக்குப்

91. புனர்ப்பூஜை பண்ணினேன்(பரி) பூர்ண வடிவானவருக்கு
ஷோடசஉபசாரஞ் செய்தேன் தீபாராதனை எடுத்தேன்.

92. நாகஆர்த்தி நானாவிதம் எடுத்தேன்
கற்பூர ஆரத்தி எடுத்தேன் கைலாசநாதருக்கு.

93. தங்கரத்தினத்தால் இழைத்த சக்ரவாளக்குடை பிடித்தேன்
இங்கிதமாய் முத்துக்குடை மூவாயிரம் பிடித்தேன்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

94. பட்டுக்குடை பிடித்தேன் பரமசிவ பார்வதிக்கு
விருதுகளும் தான்பிடிக்க விதவிதமான வாத்யமும்முழங்க

95. குஞ்சம் பிடிக்கக் குடையும் நிழல் காட்ட
வரிசையுடன் காளாஞ்சி மங்கையரும் ஏந்திநிற்க

96. வெண்சாமரம் வீச விருதுகளும் தான் முழங்க
கட்டியம்போடக் கணிகைமார் பாடி நிற்க

97. மேளமுடன் நாதஸ்வரம் முன்னே எடுத்தூதப்
பேரிகை மத்தளமும் புல்லாங்குழலுமுத

98. முகவீணை ஸ்வரமண்டலி முன்னே எடுத்தூதப்
பலவித்மாய்த் துதித்துப் பதினெட்டு வாத்தியமும்

99. திமிதிமி என்றூதத் தேவர்களும் பூச்சொரிய
அப்சரசு மாதர்களில் ஆயிரம்பேர் நர்த்தனமிட

100. ரம்பையுடன் ஊர்வசியும் நர்த்தனங்கள் பண்ணிநிற்க
சந்ததமும் கந்தர்வாள் சங்கீர்த்தனம் பாடச்

101. சாஸ்திரங்களாறும் சதுர்வேத சாரமெல்லாம்
ஏத்தமுடன் அந்தணர்கள் ஓதிப் புகழ்ந்துரைக்க

102. சுதமஹாமுனிவர் சகலபுராணங்கள் சொல்ல
தேவரிஷி நாரதரும் சங்கீர்த்தனம் பாட

103. பிரதணத்திலே கோடி பண்ணிவந்தேன். சங்கரரை
நமஸ்காரத்தில் அனந்தம வணக்கமுடனே பணிந்தேன்.

104. பத்மாஸனத்திலிருந்து பஞ்சாக்ஷரம் ஜபித்தேன்.
சகல கணங்களுடன் சண்டி நந்திகேஸ்வரருக்கும்

105. சிவபிரஸாதத்தாலவர்க்கு திருப்திகளும் பண்ணி
வைத்தேன்.
மற்றும் பிரசாதம் வழங்கினேன். எல்லோருக்கும்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

106. (நான்) தானும் பிரஸாதம் சம்பூர்ணமாய்ப்புசித்துப்
பூவெடுத்துச் சிரசில்வைத்துப் போற்றி
அவரைப் பணிந்தேன்

107. பொற்பீடத்தின் கீழிருந்து போற்றிப் பணிந்திருந்தேன்.
பார்வதி நாதரைப் பணிந்து ஐக்கியம் நானடைந்தேன்.

108. சக்கரத்தார் சொன்னபடி ஸாம்ப பரமேஸ்வரரைப்
பக்தியுடன் வீமஸேனன் பண்ணிவந்து பூஜைதன்னைப்

109. பக்தியுடன் கேட்டவரும் சிரத்தையுடன் சொன்னவரும்
உற்றுகந்து நித்தயமும் உறுதியுடன் சொன்னவரும்

110. நித்தியம நூறுலிங்கம் பூஜைபண்ணும் நற்பலனை
நிச்சயமடைவான் என்றாரே அச்சுதரும்.

111. பார்வதியாருடன் கூடப் பரமசிவனாரை
இப்படியே பூஜைபண்ணி இருதயத்திற் கண்டவர்க்கு

112. மாயைவினை ஒழியும் மஹாமோஹம் நீங்கிவிடும்
தேஜோன் மயமான சித்திமயமாய் விடுவாய்.

113. அகங்காரம் நீங்கி அருளின்மயமாய் விடுவார்.
அம்பிகைநாதருடன் ஐக்கியமடைந்திடுவார்.

ஓம் ப்ரம்மார்ப்பணம் அஸ்து.

ஸ்ரீ ரங்கநாத மானஸீக ஸ்தோத்திரம்

(சூர்ணிகை)

1. ஹேதேவா நாவின்னப்பமுலு கைகொனிநன்னு
ரக்ஷிம்பவே ரங்கேசா
நா ஸங்கல்ப விகல்பமுலு நீகு உபயகாவேரிமத்யமுலு

2. நா தேகமுலு நீகு ஸ்ரீரங்க க்ஷேத்ரமுலு
நா ஸப்தாபரணமுலு நீகு ஸப்தப்ராகராமுலு

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

3. நா ரஜோகுணமுலு நீகு ஹேமசிகரமுலு
நா கர்வமுலு நீகு கருடஸ்தம்பமுலு

4. நா விவேகமுலு நீகு விமானஸ்த்தானமுலு
நா காமக்ரோதமுலு நீகு ஸ்வர்ணகவாடமுலு

5. நா ஜ்ஞானவைரக்யமுலு நீகு துவாரபாலகுலைன
ஜயவிஜயுலு
நா புருஷாகாரமுலு நீகு ஆஸ்பதசயனமுலு

6. நா மோஹாஜாலமுலு நீகு பாதார்ச்சன
ஸ்ரீ துளஸீ குஸுமமுலு
நா ஸுகஸம்போகமுலு நீகு சந்தனாதிலேபமுலு

7. நா மோஹமுலு நீகு நவரத்னகிரீடமுலு
நா ஜாமுலு நீகு கஸ்தூரிதிலகமுலு

8. நா வசனமுலு நீகு ஸகஸ்ரநாமமுலு
நா பக்திச்ரத்தலு நீகு நேனுவேசின் வனமாலலு

9. நா ச்ரவணகீர்த்தமுலு நீகு மகரகுண்டலமுலு
நா ஜ்ஞானேந்திரியமுலு நீகு நீராஞ்சனதூபதீபமுலு

10. நா கோலாஹலமுலு நீகு கண்டாநாதமுலு
நா சுபாசுபமுலு நீகு மஹாநைவேத்யமுலு

11. நா ரஸகந்த முலு நீகு தாம்பூலமுலு
நா சஞ்சாரமுலு நீகு ப்ரவக்ஷிணமுலு

12. நா ஸம்போகசயனமுலு நீகு ப்ரணாமுலு
நா விவாஹாரமுலு நீகு ஸ்தோத்ரமுலு

13. நா ஸந்தோஷமுலு நீகு கருடாதிவாஹனமுலு
நா கர்மேந்த்ரிந்யமுலு நீகு நிர்த்தகீதவாத்யமுலு

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Shollingar

14. நா ஜாக்ரத்ஸ்வப்னஸுஷுப்துலு
நீகுசத்ரசாமர ஆலவட்டமுலு

அந்தரங்கமுன வீனி கைகொனி நன்னுரக்ஷிம்பவே ரங்கேசா!

15. நிர்வர்த்தகா ! தீனசரண்யா! நிகிலஜகமாயா
மோஹாந்தகாரா !

ரங்கநாயகி குசகும்பப்ரியா!
ஸ்ரீ ரங்கநாதா ! நமஸ்தே ! நமஸ்தே ! நம !

ஓம் ப்ரம்மார்ப்பணமஸ்து.

பரதேவி துணை

ஜீவாத்மா அந்தர் முகமாகி ஆராச்சி செய்து அறிவாகிய மணியைப் பரமாத்வாவிடம் ஸமர்ப்பித்தது.

வேதாந்த – நொண்டிச் சிந்து

1. சாந்தநரசிம்மர் பாதத்திலே நான்
சரணமென்றனுதினமும் பணிந்தேன்
சரணமென்றே அடைந்தேன்.

2. பணிந்தபின் என்னைப் பார்த்தார் தயாபரர்
பறந்ததே எந்தன் கர்மமெல்லாம்.
திரும்பியே வாராமல்.

3. தீர்த்தார் ஜன்மத்தைக் காத்தார் கருணையால்
பார்த்தார் பச்சைமரத்தாணி போலே
ஆத்தாள் உதரம்விட்டு மாத்தினாரே !

4. மாற்றில்லாத மறுபொருளைக் கண்டுநான்
மனது புளகதிமானேனே
மறந்தேன் சரீரந்தன்னை.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

5. ஆனேன் ஒருவடிவானேன் குருபாதம்
தானே வலுப்பிடியானேனே.
நானே நளின பதாம்புஜத்தைப்

6. (பரி) பக்குவமாச்சுதென்று பக்த தயாபரர்
பற்றி முக்திதர நினைத்தாரே!
(பரா) சக்தியின் கிருபையினாலே!

7. உபநிஷத்வாக்யம் பொறுக்கி என் செவிதனில்
உரைத்தார் தாரகத்தை வான்போல
நிறைத்தார் பூரணத்தை,

8. உறைத்த அக்ஷரம் பிடித்தேன் அரைக்ஷணம்
குடித்தேன் ஆனந்தக் களிப்பானேன்
மதர்த்தேன் மதகரிபோல்.

9. பவஸாகரத்தைக் குருஸாதனத்தால்
அனாயாஸமாகவே கடந்தேனய்யா
ஒரு ஆவின் குளம்படிபோல்

10. ஸ்நானபானம் ஸந்தியாதி தர்ப்பணங்கள்
ஸந்தமும் செய்துகொண்டு வந்தாலும்
பிரமமம் ஸந்திக்கவில்லை ஐயா!

11. ஆதிஸேதுகாசி காவேரி முதலான
அறுபத்தாறுகோடி தீர்த்தங்களும்
ஆடிவந்தேன் ஆத்மாவைக் காணேன் ஐயா !

12. முப்பத்து முக்கோடி மூர்த்திகளையுங் கண்டு
முக்காலும் வளையவந்து துதித்தாலும்
பிரம்மம் கிட்டவுமில்லை ஐயா!

13. அஷ்டாங்கயோக ஸமாதியிலிருந்து
ஹடயோகத்தினாலே ஆராய்ந்தேன்.
பிராணாயாமத்திலுங் காணேன்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

14. ஸ்த்தூர சூக்ஷ்மக் காரணாதிக் கோட்டையை
தும்பி போலப் பறந்து நான் தேடினேனே
ஜகதம்பிகை அருளினாலே.

15. ஒருத்தராலேயும் பிரவேசிக்கக்கூடாத
உபநிஷத்தாகிய காட்டிற்குள்ளே
நானொருவனாய் ஊடாடி நுழைந்தேனையா !

16. பற்பல ஸ்ருதிகள் ஸ்மிருதிகளாகிய
பிரவாயங்களுமங்கே பெருகுதையா
மறுகரை காண முடியாமல்.

17. (வேத) சாஸ்த்ரங்களாகின்ற கொடுமுடி வனத்திலே
மேகம்போலேயங்கே வளர்ந்து கொண்டு
வழிமேலே போகவு மொட்டவில்லை.

18. அறுபத்துநாலு கலைகளாகின்ற
ஆனைகள்மலைபோல வருகுதைய்யா !
கால்வைத்திட இடமுமில்லை.

19. ஜனன மரணமாகின்ற மலைப்பாம்பு
வழியிலே மரம்போல கிடக்கின்றதே !
அதைத்தாண்டிப் போகவும் தெரியவில்லை.

20. சுவர்க்க நரகமென்ற அறப்பிசாக வந்து
அச்சப்படுத்துவதைக் கண்டுமே நான்
அலக்ஷ்யஞ் செய்தேனே.

21. (மனு) வசனங்களாகின்ற பட்சிகள் வனத்திலே
வாசிபூசி என்ஙற கத்திடவே
மனது சூத்ரவழிச் சுற்றிடவே

22. (பல) புராணங்களாகின்ற வண்டுகள் வனத்திலே
பாடிப்பாடிச் செவியில் அடிக்கின்றதே
தேகம் பரவசந் தானாச்சே !

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

23. தத்துவங்களான தொண்ணூற்றாறு கொடிகளும்
சன்னபின்னலாய்ப் படர்ந்து கொண்டு
(தலை) சுற்றுகிறதே சற்றுந் தெரியாமல்.

24. அனவய வ்யதிரேக மாகின்ற மூங்கிற்
பண்ணைகள் வெகுவாய் வளர்ந்து கொண்டு
தலைசுற்றுகிறதே சற்றுந் தெரியாமல்.

25. இப்படிப்பட்ட இந்த வேதாந்தக் காட்டை
எப்படி நாமும் கடப்போமென்று
ஏக்கமும் தானாச்சே!

26. அறிவு நீதானென்று உளவுசொன்னார் குரு
அதுவே திடமாகப் பிடித்துக்கொண்டு
(நான்) அடிமேலடிவைத்து ஆராய்ந்தேன்.

27. சத்சங்கமாகின்ற சாதுக்கள் வழியிலே
சகாயமாவே கூடிற்றையா !
மனது சந்தோஷமுந் தானாச்சே !

28. வனத்து துரைச் சங்கம் நடந்துபோகும்போது
வந்தாரே அங்கே மதவாதியர்கள்
(வாத யுத்தம்) தந்தாலே வழிவிடுவோ மென்றார்.

29. அடுத்தாரென்னை அவாள்; எதிர்த்தேன் அவாளைநான்
தொடுத்தேன் அத்வைத் சரத்தினாலே
துணித்தேன் அவாள்மதம் தூள்தூளியாய்.

30. ஆறு மதவாதிகளும் வாதுக்குத் தோற்றுவிட்டு
யாருக்கும் சொல்லாமலே ஓடினாரே
அவரைத் திடஞ்சொல்லி ஜயித்தேனையா!

31. பதார்த்த லக்ஷ்யயார்த்த விசாரணை பண்ணி நான்
பையப்பைய வழி கடந்தேனே .
நான் பண்ணின தபசினாலே

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

32. சிரவண மனன நித்யாசன மாகின்ற
சாதனங்களினால் வழிதாண்டி
தத்திப்பற்றி மெல்லப்போகையிலே

33. ஜீவனீச்வராளென்ற இரண்டு இராக்ஷதாள்
ஜனத்துடன் ஓடிவந்து எதிர்த்தார்களே !
ஜயிக்க உபாயந் தெரியவில்லை

34. ஸத்குரு பாதத்துத் தூளியைச் சிரஸிலே
சந்தோஷமாகவே நான் தரித்துக்கொண்ட
தள்ளினேன் சர்வ சத்ருராதியரை

35. அகில உபாதிகளை மடிய அடித்துவிட்டு
ஆனந்த அம்புதியில் அமிழ்ந்தேனே!
அகண்டாகாசமாய் நிறைந்தேனே!

36. காலத்ரயங்களும் லோகத்ரயங்களும்
தேஹத்ரயம் கவிசாகைகளும்
கங்கு கங்காகவே கரைந்ததைய்யா

37. அஞ்ஞானமாகின்ற காயத்துக்குள்ளே
விஞ்ஞான அக்கினி போய் விழுந்து
மிகவுந் தஹிக்கத் தொடங்கிற்றய்யா!

38. பஞ்சகோசங்களும் பஞ்சவிஷயங்களும்
பஞ்சக்தியும் அரக்கு மாளிகையும்
பஞ்சுகள் போலவே எரிந்ததையா !

39. ஷட்அரிகள் ஷட்விகாரம் பஞ்சகோசமாகின்ற
சாவடிகளும் உப்பரிகைகளும்
தகர்த்துத் தகனங்களாச்சுதையா!

40. ஆதித்யன் முதலான ஐந்து பிரகாசத்தையும்
ஆக்கிரமித்துக் கொண்டு ஜொலித்ததையா !
பரமாத்மா தேஜஸ்ஸுடன்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

41. திடசித்தமாகவே சத்சங்கபலத்தால்
தேஜோமயமான ஆத்மாவை நான்
தனக்குள்ளே கண்டு கொண்டேனையா!

42. முக்தியாகின்ற அம்மானைக் கண்டு நான்
முத்திரைகொடுத்து மணி வாங்கிக்கொண்டு
உத்தர திக்கில்வர நினைத்தேனையா !

43. சம்சாரமாகும் விருஷச் சாகைக்கொப்புகள் தன்னை
சடசடாயமாக முறித்துவிட்டு
(ஒரு) தெந்தினப் பாட்டையும் பாடிக் கொண்டு

44. ஜனன மரணமெனற சிந்துவைக் கடந்துநான்
திரும்பிவந்தேனையா இக்கரையில்
ஜீவன் முக்தாளைக்கண்ட (சோதி) சொன்னேனையா !

45. மட்டில்லாத ஒரு ஆனந்தங்கொண்டு நான்
மார்புதட்டிக் கொக்கரித்துகொண்டு
வந்தேன் நான் உம்மிடத்தில்.

46. வந்தனம் உம்முடைய பாதத்திலேநான்
தந்தேனே திருவடியை
அடைந்தேனே திருவடியை !

47. பக்தவத்ஸலா சரணமய்யா!
பரமதயாளா சரணமய்யா !
லக்ஷ்மிகாந்தா சரணமய்யா!
ஸ்ரீ நரஸிம்மா சரணமய்யா !
தவத்திற்கதிபா சரணமய்யா!
சுவாமிவெங்கடேசா சரணமய்யா !
குணத்திற்கதிபா சரணமய்யா!
குருவெங்கடேஸ்வரனே சரணமய்யா!

ஓம் தத் ஸத் ப்ரம்மார்ப்பணமஸ்து

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hanmaran Collection, Srinagar

திருவிளக்குப் பிரார்த்தனை

1. விளக்கே திருவே வேதனுடைய நற்பிறப்பே
ஜோதி விளக்கே ! ஸ்ரீதேவி பெண்மணியே !

2. அந்திவிளக்கே ! அலங்காரப் பெண்மணியே !
காந்திவிளக்கே காமாட்சி தேவியரே !

3. பசும்பொன் விளக்குவைத்துப் பஞ்சுத் திரிபோட்டுக்
குளம்போல நெய்யைவிட்டுக் கோலமுடன் ஏற்றி வைத்தேன்

4. பொட்டுமிட்டேன்; குங்குமத்தால் பூமாலை சூட்டி விட்டேன்
ஏற்றினேன் நெய்விளக்கு எந்தன் குடிவிளங்க.

5. வைத்தேன் திருவிளக்கு மாளிகையுந் தான் விளங்க.
மாளிகையில் ஜோதியுள்ள மாதாவைக் கண்டு வந்தேன்.

6. மாங்கல்யப்பிச்சை மடிப்பிச்சை தாருமம்மா !
ஸந்தானப் பிச்சையுடன் தனங்களையும் தாருமம்மா!

7. பெட்டி நிறையப் பூஷணங்களையும் தாருமம்மா !
கொட்டில் நிறைய பசுமாடு தாருமம்மா !

8. புகழுடைம்பைத் தந்து எந்தன் பக்கத்தே நில்லுமம்மா !
அகத்தெளிவைத் தந்தெனது அகத்தினிலே வாழுமம்மா !

திருவிளக்கு தேவி ஸ்தோத்திரம்

9. மேவித்தெழுந்து நின்றேன் தேவிவடிவு கண்டேன்.
வஜ்ரக்கிரீடங் கண்டேன் வைடூரிய மேனி கண்டேன்.

10. முத்துக் கொண்டைகண்டேன்முழுப்பச்சைமாலை கண்டேன்
சவரிமுடிகண்டேன் தாழைமடல் சூடக்கண்டேன்.

11. பின்னழகு கண்டேன் பிறைபோல நெற்றிகண்டேன்.
சாந்திடும் நெற்றிகண்டேன் தாயார் வடிவுகண்டேன்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

12. குறுக்கிடும் நெற்றிகண்டேன் கோவைக்
கணிவாயுங் கண்டேன்.
செந்தாழைப் பூமடல்போல் செவியிரண்டுங்
கண்டு கொண்டேன்

13. செண்பகப் பூப்போல் திருமூக்கும் கண்டுகந்தேன்.
மார்பில் பதக்கம்மின்ன மாலை அசையக் கண்டேன்.

14. காலில் சிலம்பு கண்டேன் காலாழிப் பீலிகண்டேன்.
பட்டாடை தானுடுத்திப் பிடியிடையைக் கண்டுகந்தேன்.

15. மங்கள நாயகியே! உன்னை மனங்குளிரக்
கண்டு கொண்டேன்
அன்பே அருந்துணையே ! உனையடைந்த எந்தனுக்கு,

16. வந்த வினையகற்றி மகாபாக்கியம் தந்தருள்வாய்.
தந்தை தாயும் நீயே! தற்காக்கும் ரக்ஷிகி நீ !

17. அந்தத்திற்குதவி நீயே! ஆதாரமும் நீயே !
உன்னை உறவாகநம்பி உற்றாரைக் கைவிட்டேன் தாயே!

18. சந்தான சௌபாக்யமளித்து சத்துக்கள்
சேவை எனக்களிப்பாய்.
பக்தியுள்ள மனதெனக்குத்தந்து பரதேவி
கிருபையுடனே அருள்வாய் !

ஓம் தத் ஸத் ப்ரம்மார்ப்பணமஸ்து.

பரதேவதை ஸ்தோத்திரம்

1. கொத்தருகும் கொன்றை தும்பைசூடும்
கோடிலிங்கர் பாகமுடையவளே !
மைக்குழலி மங்கையுமவளே
வார்காதுப் பணியிசையும் வடிவே !

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vidhya Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

2. பொற்கொடியே ! அடியேனிடர் தீர்ப்பாய்
புகழுடை முக்திப் பதமளிப்பாய்
சுத்தமாஞ்ஜோதி ஒளிக்காட்டி
ஜயமான முக்திப் பதந் தருவாய்.

3. கண்டங் கருத்தவர் ஈசரிடத்தில்
கருணையுடன் எனக்குறுதி சொல்வாய்.
தண்டம் பணிகின்றேன் போற்றி போற்றி போற்றி உந்தன்
சின்மயானந்த பதம் தருவாய்.

4. பாதகங்கள் தீரவே எனக்குப்
பார்த்திடுவாய் உன் கருணை விழியால்
பார்வதியம்மா என் பாவங்களைப் போக்கிப்
பரிவுடனே மோக்ஷ பதமருள்வாய் !

5. (அம்மா) எட்டாத தூரத்திலுமிருப்பாய் நீ
என்னுடைய மனத்தில் எப்பொழுதுமுள்ளாய் !
பக்தாளைத் தேடியழைப்பாய் அவர்கள்
பாவங்கள் பாசங்கள் சேராமல் ஒழிப்பாய் !

6. துன்பமென்னும் பாவக்கடலில் விழுந்து
தாய்முகங் காணாத பிள்ளைபோலப்
புலம்புகின்றேன் இந்தக் கர்ம பூமியிலே
பெரியோர்கள் கொழுதேற்றும் நாயகியே!

7. தாயே சரணம் ! உன்தாளே சரணம் ! சங்கரியே சரணம்!
மின்னே சரணம் ! மீனாம்பா சரணம் ! மீனாக்ஷிதேவிசரணம்!
பொன்னே சரணம்! பூவே சரணம்! பொற்பாதமே சரணம் !
சரணம் சரணம் என்னிடர் தீர்த்து ஸாயுஜ்யந் தருவாய் !

8. அச்சந் துலைப்பாய் அருளைப் பொழிவாய்
அழியாப் பத மெனக்கு அருள்வாய் !
தொப்பை வயிற்றான் தும்பிக்கையா லென்னைத்
தூக்கியே கரையில் சேர்ந்திடுவாய் !

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

9. சரணமென்றுந்தன் தாளினைப் பணிந்தேன்
தள்ளி விடலாமோ?
நெடுநாளாயுன்னை நம்பினதெல்லாம்
நிஷ்ப்பலனாய் விடுமோ ?

10. கருணாநிதியே ! கல்யாணி உமையே !
கதம்ப வனேஸ்வரியே !
பாசத்தைப்போக்கி பவபயம் நீக்கி (உன்)
பாத நிழலில் சேர்ப்பாய் !

11. பஞ்சாக்ஷரத்தை உபதேசம் பண்ணிப்
பவபயம் போக்குவிப்பாய் !
தேவியே! சங்கர வாமத்திலே சேர்ந்த
சேவையைத் தந்தருள்வாய்.

12. அன்னையுமையே ! உன்னை அல்லா லெந்தனுக்கு
ஆதாரம் வேறுமுண்டோ ?
கமலதளலோசனி ! கதம்பவனவாசினி !
கைவல்யபத தாயினி !

13. விச்வமெல்லாம் நிறைந்த விஸ்வேசர் வாமத்திலே
விளங்கிடும் தேவிநீயே !
அந்தரி சுந்தரி சிவகாம சுந்தரி !
ஆதிபாரசக்தி நீயே !

14. சந்ததமும் உன்னைநான் சரணமென்று நம்பினேன்
பாவமெல்லாம் போக்கியே
அனவரதம் கருணா கடாக்ஷம் வைத்தென்னை
அடிமைகொண்டே யாளுவாய் !!

ஓம் தத் ஸத் ப்ரம்மார்ப்பணமஸ்து.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கிரியின் புதிய வெளியீடு!

ஸகல தேவதா காயத்ரீ மந்த்ரம்

Sanskrit Pkt Size

Tamil Pkt Size

Malayalam Pkt Size

57 தெய்வங்களுக்கும் உரிய காயத்ரீ மந்திரங்கள் கையடக்க புத்தகத்தில்...

கிடைக்கும் இடங்கள்

கிரி டிரேடிங் ஏஜென்ஸி பிரைவேட் லிமிடெட்

"இந்திய கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்திற்கு"

14 (Old10), கபாலீஸ்வரர் சன்னதி தெரு, மயிலாப்பூர், சென்னை-4.

✆ (044) 2464 0376, 2464 2530, 2495 3820

மும்பை - சென்னை - காஞ்சிபுரம் - கோயம்புத்தூர் - மதுரை - செகந்திராபாத் - பெங்களூர்

Website : www.giri.in *E-mail : sales@giri.in*

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கிரியின் புதிய வெளியீடு!

41 பூஜைகள் கொண்ட விளக்கப்படங்களுடன் கூடிய சம்ப்ரதாய விரத பூஜா விதானம்



- சாஸ்திரிகள் வரவில்லையா, கவலை வேண்டாம்...
- பூஜைகளை எளிய முறையில் செய்ய ஒவ்வொரு மந்திரங்களுக்கும் செய்முறை விளக்கப் படங்களுடன் புரிந்து கொள்ளும் வகையில் அமைந்தது, **கிரியின் சம்ப்ரதாய விரத பூஜா விதானம்.**

முதன் முறையாக 41 பூஜைகள் அடங்கிய ஒரே புத்தகம்.

கிடைக்கும் இடங்கள்

கிரி டிரேடிங் ஏஜென்ஸி பிரைவேட் லிமிடெட்

"இந்திய கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்திற்கு"

14 (Old10), கபாலீஸ்வரர் சன்னதி தெரு, மயிலாப்பூர், சென்னை-4.

✆ (044) 2464 0376, 2464 2530, 2495 3820

மும்பை - சென்னை - காஞ்சிபுரம் - கோயம்புத்தூர் - மதுரை - செகந்திராபாத் - பெங்களூர்

Website : www.giri.in E-mail : sales@giri.in

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

DINASARI STOTRANGAL

(TAMIL)

GIRI

ISBN 978-81-7950-113-9

9 788179 501139

91001113

Price Rs.30.00

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,